
# முனைப்புடன் எழு

நகுலா சிவநாதன்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைப்புடன் எழு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முனைப்புடன் எழு!

*கவிஞர் நகுலா சிவநாதன்*
*(விஞ்ஞான ஆசிரியர்)*

வெளியீடு
தமிழ் மன்றம், யாழ் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'முனைப்புடன் எழு'

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | கவிஞர் நகுலா சிவநாதன் |
| முதற் பதிப்பு | : | 2004 ஆவணி |
| பதிப்புரிமை | : | ஆசிரியர் |
| வெளியீடு | : | தமிழ் மன்றம், யாழ் பல்கலைக்கழகம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி நகுலா சிவநாதன் அவர்களுக்கு எமது ஆசிகள்

**நா**ம் ஒவ்வொருவரும் ஒருங்கிணைந்து நமது மூதாதையர்கள் விட்டுச் சென்றுள்ள மொழி, கலை, கலாசாரம், பண்பு, இயல், இசை, நாடகம், அன்பு இவைகளை மிக அவதானமாகக் காப்பாற்ற வேண்டும்.

அந்த வகையில் தமிழ்ப் பற்றில் மிக நாட்டமுள்ள, ஆர்வமுள்ள ஆசிரியை திருமதி நகுலா சிவநாதன் அவர்கள் தங்கள் 14 வருஷ அனுபவத்தில் 6 சிறந்த நூல்களை விஞ்ஞானம், மெய்ஞ்ஞானம், ஆன்மிகம், சிறுவர் உளவியல், மழலைப் பாடல்கள், தத்துவம், கவிதை என அம்சங்கள் பலவற்றை உள்ளடக்கியதாகப் படைத்திருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது **முனைப்புடன் எழு** என்ற சிறந்த கவிதை நூல் ஒன்றைப் படைத்திருக்கிறார்கள். இதை நினைத்து நாம் பெருமகிழ்ச்சியடைகின்றோம். இந்தக் கவிதை நூலிலும் கூட மக்களுக்கு வேண்டிய நோயற்ற வாழ்வைக் கொடு இறைவா! என்ற வகையிலும் நமது இடப்பெயர்வினால் ஏற்பட்ட சீரழிவு காரணமாக சார்ஸ் நோய் எப்படி நம்மையெல்லாம் சீரழிக்கின்றது என்பது பற்றிய வர்ணனையும் உண்மையில் பாராட்டுதலுக்குரியதே. இயற்கை எவ்வளவு தூரம் மனிதனுக்கு ஒத்துப்போகிறது? இயற்கையன்னைக்கு யாராவது பாடம் சொல்லிக் கொடுத்தார்களா? அல்லவே! ஆனால் இயற்கையில் பிறந்த மனிதனுக்கு மட்டும் ஏன் இந்த முரண்பாடு. இது அறிவீனமல்லவா! என்று அமைத்திருக்கின்ற கவிதையுங்கூட மனதைக் கொள்ளை கொள்கின்றது.

சிறந்த நற்பணியைச் செய்துவரும் ஆசிரியை திருமதி நகுலா சிவநாதன் அவர்களுக்கு எமது ஆசிகள் உரித்தாகுக. எல்லாம்வல்ல அன்னை ஸ்ரீ காமாக்ஷி அம்பாளைப் பிரார்த்தித்து ஜகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரு ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாத
ஸ்வாமிகளையும் பிரார்த்தித்து நமது
ஆசியையும் வழங்குகின்றோம்.

வாழ்க இவர் தொண்டு!
வளர்க நமது சமய அறநெறிகள்!
ஓங்குக தமிழன் புகழ்!

**தயா ஸர்வ பூதேஷு - சகல ஜீவராசிகளிடமும்**
**கருணை காட்டு**

இப்படிக்கு
ஹம் ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் ஆதீனகர்த்தா
ஸ்ரீவித்யா உபாசகர்
இரேவணசித் **சிவஸ்ரீ ஆறுமுக பாஸ்கரக்குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

**ஜே**ர்மனியிலுள்ள டோட்முண்ட் நகரத்தில் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் ஐரோப்பியக் கிளை நடாத்திய தமிழ் விழாவுக்கு *2003* செப்டெம்பர் மாதத்தில் சென்றிருந்தேன். *27.09.2003* அன்று நடைபெற்ற அந்த வெற்றித் தமிழ் விழாவில் தமிழ்ப் புலவர் தேர்விலே வெற்றி பெற்றவர்களுக்குப் பட்டம் வழங்கும் நிகழ்ச்சியும் இடம்பெற்றது. அவ்வாறு புலவர் பட்டம் பெற்றவர்களுள் நகுலா சிவநாதனும் ஒருவர். பயிற்றப்பட்ட அறிவியல் ஆசிரியராகிய இவர் தமிழ்மொழிக் கல்வி புகட்டும் பணியிலும் ஈடுபட்டுள்ளார். கவிதை எழுதுவதிலே மிகுந்த ஆர்வமுடையவர் என்பதை அவருடன் உரையாடியபோது அறிந்துகொண்டேன். அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதிய கவிதைகளுள் ஒரு பகுதி இந்நூல் வடிவமாக இன்று வெளியாகின்றது.

புலம்பெயர்ந்து சென்று புகலிடத்திலே வாழும் எம் தமிழரில் பெரும்பாலானவர் ஈழ மண்ணையும் அம்மண்மீட்புப் போரினையும் அம்மண்ணின் மக்களையும் தம் எண்ணங்களிலே கொண்டவர்களாயுள்ளனர். அவ்வெண்ணம் சில கலைஞர்களின் படைப்புகளூடாகப் புலப்படுத்தப்படுகின்றது. திருமதி நகுலா சிவநாதன் தன்னுடைய கவிதைகளூடாக அவ்வெண்ணத்தினை நன்கு புலப்படுத்துகின்றார். அவருடைய 'தாயின் நினைவும் தாயக நினைவும்' என்னும் கவிதையில்,

**தாயின் நினைவும் தாயக நினைவும்**
**தாராளமாய் நிறைக்குது மனதை இப்போ**
**போருடன் வாழ்ந்தாலும் வேரொடு**
**வாழ்ந்தோம்**
**கூறுபோட்டுப் பிரித்தாலும் குஞ்சுகளாய்**
**வாழ்ந்தோம்**
**வீறுகொண்டு எழுந்தோம் விரைவாகச்**
**செயற்பட்டோம்**
**நாடுவிட்டுச் சென்றாலும் நம்தமிழை**
**வளர்த்தோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புலம்பெயர்ந்து வந்தாலும் நிலமதையும் நினைத்தோம்.**

என்று கூறப்படுகின்றது. ஜேர்மனியிலே பிறந்த தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் பேசவும் தமிழ் மொழியின் சிறப்பினை உணரவும் தன்னாலான பணியினைச் செய்யும் நகுலாவின் அனுபவம் 'நாடுவிட்டுச் சென்றாலும் நம்தமிழை வளர்த்தோம்' என்னும் அடியினூடாகப் புலப்படுகின்றது.

வன்னிவாழ் மக்களின் அவலநிலை இன்னும் தீர்ந்தபாடில்லை. தன்மானத்துடனும் ஒழுங்குடனும் உயர் குறிக்கோளுடனும் வாழும் அம்மக்களின் பொருண்மிய நிலை, கல்வி நிலை இன்னும் உயர்ந்தபாடில்லை. எல்லாவற்றையுமே உள்ளடக்கி,

**அடர்ந்த மரக்காட்டில்**
**பென்னம் பெரிய குடும்பங்கள்**
**சின்னம் சிறிய குடில்களில்**
**வன்னி மண்ணில் வாழும்**
**சின்னம் சிறு பூச்சிகளாய்**
**வாட்டமான வாழ்வை - எண்ணி**
**நானும் ஏங்குகிறேன்**

என்னும் பாடலடிகளால் புலப்படுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுலாவின் உள்ளக் குமுறல்களும், எண்ணக் கருத்துக்களும் எளிமையான தமிழ்த் தொடரியங்களில் உரைக் கவிதைச் சரத்தொகுதியாக வெளிப்படுகின்றன.

நகுலாவினுடைய இம்முயற்சி பாராட்டித் தட்டிக்கொடுக்கப்பட வேண்டியது. அவரிடமிருந்து உயர்ந்த கவிதைகளை எதிர்பார்க்கிறோம். தமிழ்மொழியிலும் தமிழ் மக்களிலும் தமிழ் மண்ணிலும் பற்றுடைய இவர் தன்னுடைய தமிழ்ப்பணியின் ஒரு பகுதியாக ஆக்க இலக்கிய முயற்சியிலே ஈடுபட்டுள்ளார். அவருக்கு எம்முடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன். இந்நூலுக்கு இம்முகவுரையினை எழுதுவதிலே மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

**பேராசிரியர் அ. சண்முகதாஸ்**
தலைவர் / தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**ந**குலா சிவநாதன் எனது மாணவி என்பதில் எனக்குப் பெருமை. ஆற்றல் நிறைந்த பெண்மணி அவர். தனது ஆற்றலை வளப்படுத்த வேண்டும் என்ற வேட்கையுடையவர். ஆகவே தேடித் தேடி சங்கதிகளைத் தெரிந்து கொள்வதில் முனைப்பாயுள்ளவர். தான் அறிந்ததை, தான் உணர்ந்ததை, தன் பட்டறிவை சாகிய மேம்பாட்டிற்கு உதவும் வகையில் பயன்படுத்த வேண்டும் என்ற பெருவிருப்புடையவர். **மொத்தத்தில் எண்ணத்தில், எழுத்தில் சமூக உயர்வைப் பிரதிபலிக்கும் அரிய சமூக உளவியலாளர் அவர் என்பேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முனைப்புடன் எழு** என்பது அவரது ஏழாவது நூல். பிள்ளை வளர்ப்புடன் சம்பந்தப்பட்ட அரிய ஆலோசனைகளைப் பெற்றோர்களுக்கு நல்கும் பெற்றோரிய நூல்களை எழுதித் தான் ஓர் தேர்ந்த உளவியலாளர் எனத் தன்னை இனம்காட்டிய நகுலா மழலைகளுக்கெனச் சிறுவர் பாடற்றொகுதி ஒன்றினையும் பிரசவித்துத் தன்னை ஒரு குழந்தைக் கவிஞராகவும் முன்னிலைப்படுத்தியுள்ளார்.

நாம் வாழ்ந்த நாடு, அங்கே ஊடாடிய சமூகம், புலம்பெயர்ந்து தஞ்சமடைந்த இந்த சமூகத்திலிருந்து கலாசார, பண்பாட்டு விழுமியங்களால் வேறுபட்டு நிற்கின்றபோது இங்கே நம்மவர்கள் ஊடாடுதற்குப் பெரும் அல்லல்படுவதுடன் ஆறா மன அழுத்தத்துக்கும் ஆளாகின்றனர். நகுலா எம்மவரின் மன அழுத்தத்தைப் போக்கும் வண்ணம் பல கட்டுரைகளை எழுதியதோடல்லாமல் வானொலியிலும் அது பற்றி உரைகளாற்றி தான் சமூக சிந்தனையாளர் என்பதையும் புலப்படுத்தியுள்ளார். இத்துடன் நின்றுவிடாமல் மேடைப் பேச்சிலும் வல்லுனராக அவர் செயற்பட்டதை நான் கண்டுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கப்பட்ட விடயத்திற்கு ஆதாரபூர்வமான சான்றுகளுடன் தர்க்க ரீதியாகக் கேட்பவர் லயிக்குமளவுக்குச் சுவாரஸ்யமாகப் பேசும் அவர் பாணி ரசனைக்குரியது. இவை எல்லாம் போக இந்த **முனைப்புடன் எழு** என்ற அவரது நூல் அவரது இன்னொரு முகத்தைக் கோடிட்டுக் காட்டுகிறது. கவிதை அரங்குகளிலே, வானொலியிலே, பத்திரிகைகளிலே அவரால் காலத்துக்குக் காலம் வாசிக்கப்பட்ட கவிதைகளில் பொறுக்கி எடுக்கப்பட்டவையுடன் விசேடமாக இந்நூலுக்கென எழுதப்பட்டவையும் உள்ளடக்கி இந்நூல் பிரசுரமாகிறது.

நாட்டிலே நடந்த அனர்த்தங்களால் இன்று ஈழத் தமிழர்கள் நாற்பது வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு மொழி பேசும் மக்களிடையே, வெவ்வேறு கலாசார சூழல்களிலே வாழ்கிறோம். நாம் எங்கு வாழ்ந்தாலும் நம் அனைவரையும் இரண்டு விடயங்கள் ஒன்றாகக் கட்டிப் போட்டுள்ளன. அவை எமது தாய்நாடும் எமது தாய் மொழியும். எங்கு நாம் வாழ்ந்தாலும் எமது எண்ணங்கள், எமது உணர்வுகள் யாவுமே எமது தமிழ் ஈழம் பற்றியதே. ஆகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுலாவின் **முனைப்புடன் எழு** என்னும் நூலில் முனைப்பாயுள்ளவை யாவும் அவைதான். ஏனென்றால் பேனாவை எடுத்து எழுது முன்னரே பிரவாகம் எடுத்தோடுகிறது அது பற்றிய சிந்தனை. எண்ணக் கருவூலம் தங்கு தடையில்லாமல் பாய்ந்தோடுகிறது. நகுலாவின் ஏனைய கவிகளும் தரத்தில் சோடை போனவை அல்ல. அன்னைத் தமிழ் பற்றியும் புலம்பெயர் வாழ்வின் அவலங்கள் பற்றியும் பிள்ளைகள் வளர்ப்புப் பற்றியும் அற்புதமான கவிதைகள் எழுதியுள்ளார். ஒரு தரமான கவிஞர் எம்மத்தியில் மிளிர்வது கண்டு நாம் உவகை கொள்ளலாம். பன்முகப்பட்ட ஒரு திறமைசாலியை மாணவியாகக் கொண்ட நான் இவரை எண்ணிப் பெரிதும் உவகையடைகிறேன்.

வாழ்க! வளர்க!

அன்புடன்
**பொ. கனகசபாபதி**
மஹாஜன கல்லூரி முன்னாள் அதிபர்
பல்கலாசார ஆலோசகர்
கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

**க**லைஞானமணி திருமதி நகுலா சிவநாதன் அவர்களின் **முனைப்புடன் எழு** என்னும் கவிதைத் தொகுப்பின் பல கவிதைகளைப் படிக்க நேர்ந்தது.

நூலின் தலைப்பு காலத்துக்கேற்றது; காலத்தை வெல்லக்கூடியது. வாசகர்களைத் தூக்கி நிறுத்தும் வலிமை கொண்டது.

தூக்கி நிறுத்தும் வலிமை என்பது அதிலே தொக்கி நிற்கும் எண்ணக் கருத்துக்களின் கூட்டுமொத்தமான தாக்கத்தைக் குறிப்பது.

முனைப்புடன் எழு என்று ஒரு கவிஞர் குரல் எழுப்புகிறார் என்றால் நாம் இன்னமும் முனைப்புடன் எழவில்லை என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படை. அதற்கு என்ன காரணம்?
அவரே சொல்கிறார் :

**காட்டிக் கொடுப்புகளும் சுயமைத் தனங்களும்**
**ஈட்டிகளாக எம் ஈழத்தைக் குற்றாமல்**
**வீட்டுக்கு நேரே புள்ளடியிட்டுக்**
**காட்டிட வேண்டும் தமிழரின் ஒற்றுமையை!**

கவிஞர் குரல் எழுப்பியது 2004இல் இலங்கையில் பாராளுமன்றத் தேர்தல் நடந்த காலத்தில். தாயக மக்களுக்கு அவரது குரல் எட்டியதோ என்னவோ, அவரது சிந்தனைக்கு வெற்றி கிடைக்கும் அளவுக்குத் தமிழ் மக்கள் அணிதிரண்டு தேசியத் தலைவரின் ஆணைக்குத் தாம் ஆட்பட்டு நிற்பதை அகில உலகத்துக்கும் அறிவித்துவிட்டார்கள்.

தமிழினப் படுகொலையின் ஆரம்ப ஆண்டாகிய 1958 இலிருந்தே ஈழத் தமிழர் ஒன்றுபட்டு நிற்கவேண்டியதன் இன்றியமையாமை அரசியலாளர்களாலும் எழுத்தாளர்களாலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. தமிழர்களின் இன்றைய ஒற்றுமைக்குக் காரணமானவர் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரனே ஆவர். போர்செய் திறத்தால் சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தையும் இந்தியப் படையையும் அச்சுறுத்திய தலைவர் நேர்மைத் திறத்தால் இன்று தமிழ் மக்களை ஒன்றுபடுத்தியுள்ளார். தமிழர் உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தமிழினத்தின் ஒற்றுமை அவசியம் என்பதனை என்றோ உணர்ந்து அதனை ஈட்டுவதற்கு அமைதியான முறையில் திட்டமிட்டுப் பொறுமையோடு செயற்பட்டு வந்தவர் அவர்.

தலைவர் செய்துள்ள சமூக மாற்றங்களும் பல. அவற்றுள் ஒன்று ஆணையும் பெண்ணையும் நிகர் ஆக்கியது. நேற்று இல்லாத இந்த மாற்றம் இன்று நிகழ்ந்து விட்டதை எண்ணிப் பெருமிதம் கொள்கிறார் கவிஞர் :

**பெண்மையே மென்மையெனப் பேசிப் பேசி**
**பேதையர் ஆக்கிய காலம் போனது அப்போ.**
**கண்ணியமாய் நாட்டைக் காத்திடப் பெண்கள்**
**கரும்புலியாய் வீறுகொண்டு எழுந்தனர் இன்று.**
**நேற்று இல்லாத மாற்றம் - நெஞ்சை**
**நெகிழ வைத்தது இன்று!**

நகுலா வேம்படி மகளிர் கல்லூரியிற் கல்வி பயின்றவர். பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றியவர். 1989ஆம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு முதல் ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றார். ஜேர்மனியிலும் தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கல்விச் சேவை புரிந்து வருகின்றார். தமிழ் மொழியைச் சிறுவர்கள் எளிதாகக் கற்றுக்கொள்ள உதவும் செயல் நூல்கள் பலவற்றையும் படிமுறையாகத் தயாரித்து வெளியிட்டிருக்கின்றார். **சிறுவர் வளர்ப்பில் சிறப்பான வழிமுறைகள், மழலைகளுக்கான பாடல்கள், அன்னையின் வளர்ப்பில் அரும்புகள்** ஆகிய நூல்களையும் ஆக்கியிருக்கின்றார். இவை வெளிநாடுகளில் தமிழ்க் குழந்தைகளின் வளர்ச்சியில் ஆசிரியர் கொண்டுள்ள அக்கறையின் வெளிப்பாடுகளாக விளங்குகின்றன. இத்தகைய அக்கறை இக்கவிதைத் தொகுதியிலும் பிரதிபலிக்கின்றது. 'தமிழீழக் கல்வியின் மேம்பாடு', 'தமிழின் எதிர்காலம் கேள்விக்குறியா?' போன்ற கவிதைகளை உதாரணங்களாகக் கூறலாம்.

மேலைநாடுகளில் வாழும் தமிழர் மத்தியில் தமிழ்மொழியை வளர்த்தெடுப்பதென்பது கடினமானதொரு பாரிய பணியாகவுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இயக்கம் சார்ந்த அமைப்புக்களும் சமய தாபனங்களும் கனடா, அமெரிக்கா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கிலாந்து மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தமிழ்மொழியையும் தமிழர் பண்பாட்டையும் வளர்க்க அரும்பாடுபட்டு வருகின்றன. திருமதி நகுலா சிவநாதன் போன்ற அறிவும் ஆற்றலும் மிக்க ஆசிரியர்கள் இவ்வமைப்புகளின் அருந்தமிழ்ப் பணிகளுக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

ஜேர்மனியில் பல இடங்களிலே தமிழைப் புகட்டி வருவதோடு தமிழ்க் கல்வியின் அவசியம் பற்றி அவ்வப்போது மேடைகளிலும் பத்திரிகைகள், வானொலிகள் வாயிலாகவும் நகுலா அவர்கள் குரல் கொடுத்து வருகிறார்கள். இத்தொகுதியிலும் அக்குரலைக் கேட்க முடிகிறது.

ஓர் ஆசிரியர் என்ற வகையில் குழந்தைகளுக்கும் இளைஞர்களுக்கும் ஏன் பெரியவர்களுக்குங்கூட புத்திபுகட்டும் கவிதைகளும் இத்தொகுதியில் இடம்பெற்றுள்ளன. 'உடை உடை' என்ற தலைப்பிலான

**முடியோடு தேங்காயை**
**முனைப்புடன் எடுத்து**
**முதல்வன் விநாயகனுக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முதலில் உடைத்து**
**முயன்று உன் செயலைத்**
**தொடங்கு . . . . .**
**வெற்றி என்றும் நிச்சயம்**

என்னும் கவிதையும் 'வளர்த்திடு தன்னம்பிக்கை', 'எழுவாய் எழுவாய் இன்றே எழுவாய்!' போன்ற கவிதைகளும் இத்தகையவை.

மேலும் பண்பாடு, பண்டிகைகள், பெரியோரைப் பேணுதல், தொழிலாளர், மனிதநேயம் சார்ந்த கவிதைகளும் இத்தொகுதித் தோட்டத்தில் மலர்ந்திருக்கின்றன. தனது உள்ளத்து உணர்வுகளை அழகான தமிழால் மலர வைத்திருப்பதோடு மணம் வீசவும் செய்திருக்கின்றார். அவ்விதம் மணம்வீசும் கவிதைகளில் ஒன்று 'மறக்கலாமோ? சொல் மனமே!' என்பது.

பிறந்த மண்ணைத் துறந்து வேறு நாடுகளில் என்னதான் வசதியாக வாழ்ந்தாலும் தாயக நினைவுகள் விட்டுப்போகுமா? நகுலா தன் மனத்தைக் கேட்பதுபோல வெளிநாடுகளில் வாழும் எல்லோரையுமே கேட்கின்றார் :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை மடியில் அயர்ந்து தூங்கி
பென்னம் பெரிய நிம்மதி பெற்று
சின்னஞ்சிறிய கதைகள் பேசி
சிரித்து மகிழ்ந்த காலம்-
சிதறித்தான் போனதே!
நித்தம் அந்த மண்ணிலே
முத்தம் தந்த அம்மாவுடன்
சுற்றஞ் சூழச் சுற்றியிருந்து
வித்தை பெற்ற காலங்கள்
விரைந்து தான் வருமோ
மகிழ்ந்த அந்தக் காலம்
நெகிழ்ந்த அந்தப் பொழுதுகள்
மறக்கலாமோ? சொல்மனமே!
மறக்கலாமோ? சொல்மனமே!

**'தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை**
**தெரிந்து உரைப்பது கவிதை'** என்றார்
கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை
அவர்கள். அந்தத் 'தெள்ளத் தெளிந்த'
தமிழை மேற்போந்த கவிதையிற் கண்டு
இன்புறுகின்றோம்.

தெளிவு நகுலாவின் கவிதைகளிற் காணக் கிடக்கும் சிறப்பியல்பு. அவர் கவிதை பாடுவது எல்லோரும் விளங்குவதற்காக என்பது தெளிவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கவிஞர்கள் தரம் என்ற பெயரில் படித்தவருக்குக்கூட விளங்காத வகையில் பசுந்தமிழைப் பாலைவனத் தமிழாக்குகிறார்கள். நகுலா உளவியல் கற்றவர். அதனால் யாருக்கு எதை எப்படிச் சொல்லவேண்டும் என்பதை நன்கு அறிந்து வைத்திருக்கின்றார்.

இருப்பினும், அவரது அறிவாற்றலையும் எழுத்துத் திறனையும் நன்கு அறிந்தவன் என்ற வகையில் அவருக்கு ஓர் ஆலோசனையை அன்புடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இத்தொகுதியில் உள்ள சில கவிதைகள் அவசரத்தில் பிறந்தவைபோலத் தெரிகின்றன. அவர் மேற்கொண்டுள்ள பன்முகப்பட்ட சமய, சமூக, கல்வித் தொண்டுகளையும் குடும்பப் பொறுப்புகளையும் நன்கு அறிந்தவர்களுக்கு அவரது வேகம் விளங்கும். வேகமாக வந்தாலும் வேரொடு அவரின் கவிதைகள் இருப்பது மிகவும் நல்லது. இவரின் சீரிய தமிழ்பணி சிறக்க வாழ்த்துகின்றேன்.

வாழ்த்துக்கள்!

**கலாநிதி கவிஞர் வி. கந்தவனம்**
கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**பு**லம்பெயர்ந்த தமிழர்கள் தமது தாய்மொழியின் வளர்ச்சியில் எவ்வளவு அக்கறையுடன் இருக்கின்றார்கள் என்பதை எண்ணும்பொழுது எம்மனம் புளகாங்கிதம் அடைகின்றது. இலங்கையில் ஏற்பட்டுவந்த தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்களால் உலக நாடுகளுக்கு புலம்பெயர்ந்த எம் உறவுகள் தாம் எந்த நாடுகளில் தஞ்சம் புகுந்தனரோ அந்நாட்டு மொழியுடன் தமிழ்மொழியினையும் வளர்த்துக்கொள்ளப் பாடுபடுகின்றனர். அங்கு எமது வழித்தோன்றல்கள் தமிழைக் கற்றுக்கொள்ளவும் அதில் பாண்டித்தியம் பெறவும் பாடுபட்டு வருகின்றனர். அவர்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்ந்து பேசப்பட வேண்டிய ஒருவரே திருமதி நகுலா சிவநாதன் ஆவார்.

ஜேர்மனிக்கு புலம்பெயர்ந்து வாழும் திருமதி நகுலா சிவநாதன் அவர்கள் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியையாக யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் கற்பித்தவர். சிறுப்பிட்டியைப் பிறப்பட மாகக் கொண்ட அவர் தாவடியைப் புகுந்த இடமாக்கி இன்று ஜேர்மனியில் ஒரு புகழ்பூத்த தமிழ் வளர்க்கும் ஆசிரியையாக மாறியுள்ளார். அவர் இதுவரை ஆறு நூல்களைத் தமிழ்மொழியில் எழுதி வெளியிட்டிருப்பதுடன் ஏழாவது நூலாக 'முனைப்புடன் எழு' எனும் இக்கவிதைநூலை வெளியிட்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. 'முனைப்புடன் எழு' எனும் இக்கவிதை நூல் கவிதை மரபை மீறாத வகையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் நிலையை தத்ரூபமாக எடுத்துக்காட்டுவதாக உள்ளது. இந்நூலில் 'முரண்பாடுகள்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கவிதை என்னை வெகுவாகக் கவர்ந்துள்ளது. கவிஞரின் உள்ளக்கிடக்கையை இலகு தமிழ்மொழியில் கவிதையாக வடித்துத்தந்த கவிஞர் நகுலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநாதன் அவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. கவித்துவத்தல் இவ்வளவு ஆர்வத்துடன் இயங்கும் ஒருவரை புலம்பெயர்ந்த தமிழர் வரிசையில் நான் காணவில்லை. அவரது மொழி, நடை அவருக்குரிய தனிநடையென்றே குறிப்பிடல் வேண்டும். புலம்பெயர்ந்த தமிழர்களுக்குக் கிடைத்த ஒரு சொத்தென்றே அவரைக் கொள்ளவேண்டும்.

குறைந்த வயதிலேயே தமிழ்மொழியைக் கற்பதிலும் கற்பிப்பதிலும் ஆர்வம் காட்டத் தொடங்கிய ஆசிரியர் திருமதி நகுலா சிவநாதன் அவர்கள் இன்று நூல் ஆக்கங்களில் கொடிகட்டிப் பறப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். காலத்தின் தேவை கருதிய இந்நன்முயற்சி எதிர்காலத்தில் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டியதுடன் அவர் முன்னரைப் போல் பல நூல்களை ஆக்கித்தர வேண்டுமென்றும் எதிர்பார்க்கின்றேன். அவரின் திறமையும் ஊக்கமும் தொடா்ந்தும் பெருகிட எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் திருமதி நகுலா சிவநாதன் அவர்கள் ஆரோக்கியத்துடன் வாழ்ந்து தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னைக்கு தொண்டாற்ற எனது
வாழ்த்தினையும் பாராட்டினையும்
தெரிவித்துக்கொள்கிறேன்.

வாழ்க கவிஞர் நகுலா!
வளர்க அவர் தமிழ்ப்பணி!

**க. தேவராஜா**
தலைவர்
வணிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

**அ**ன்புத் தமிழ் நெஞ்சங்களே!

ஒரு உள்ளத்தின் உணர்வுகளை உன்னதமாகப் படம் பிடித்துக் காட்டுபவைகளே கவிதைகள் ஆகும். கவிதைகள் காலத்தின் அவலங்களைக் கண்ணாடிபோல் காட்டுபவை. கவிஞனின் உள்ளத்தில் உதிப்பதை எழுத்தில் வடிக்கும் வடிவமே கவிதையாகப் பர்ணமிக்கிறது.

விதையாக என் மனதில் ஊற்றெடுத்த கருக்களைக் கவி விதையாக்கிக் காலத்தின் பதிவுக்காய் உங்கள் கண் முன்னே விரிக்கின்றேன். தமிழ் மீதுள்ள தீராத பற்றும் சமூக அரசியல், போர்க்கால அவலங்களும் அகதி வாழ்வின் அநியாயங்களும் என் மனதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக காலத்தில் தொட்டன. தொட்டனவற்றை அப்பப்போ கவி வரிகளால் காவியமாக்கினேன்.

வாரம்தோறும் வானலைகளில் வரும் தலைப்புக்களில் பிரசவித்தவையும் இவற்றுள் பல உள்ளன. புலம்பெயர்ந்து வந்து இந்த அவல வாழ்வில் சிக்கினாலும் உணர்வுகள் வேரான தாய்மண்ணை நோக்கித்தான் வட்டமிடுகின்றன. தாய் மண்ணின் தீராத போர் அவலமும் தினமும் ஓடி ஒளிந்த நாட்களும் இன்னமும் எம் மனதை வாட்டிய வண்ணமே உள்ளன. பூட்டிய வீட்டில் புதைந்த நாட்களை மீட்டுத்தான் பார்க்கிறோம். ஆறாத வடுக்களாய் மாறாத காயங்களாய் ஊமைகளாய் உள்ளத்தில் உறைந்தே கிடக்கின்றன. இவை யாவும் என் கவிதைச் சரத்தில் ஆங்காங்கே கோர்வையாகக் கோர்க்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு வாழ்வு, வேகமான வளர்ச்சிப்பாதை, இயந்திரமயமான சூழல் எம்மை நெருக்கிக்கொண்டு வந்தாலும் இங்கிதத் தமிழோடு இன்னமும் நெருக்கமாய் இணைகின்றோம். 14 வருட வெளிநாட்டு வாழ்வு ஆசிரியராய், சமூகப் பணியாளனாய், குழந்தை உளவியலாளனாய் என்னைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்திற்குக் காட்டியது. என் வாழ்வில் 14 வருட ஆசிரியப் பணியில் பூத்த பல அனுபவ அறிவுகளை யாத்த கவி வரிகளே உங்கள்முன் சுடர்விடுகின்றன. நேசித்த மண்ணையும் நேர்மையான உள்ளங்களையும் மீட்டுத்தான் பார்க்கிறேன். அறிஞர், ஆசிரியர், அதிபரென எழுத்துலகில் பரிணாமமடையச் செய்தோர் பலர் உள்ளனர்.

ஏழாவது நூலாக எழுகின்ற இந்நூலில் எண்ணக்கருக்கள் பலவற்றை எழுச்சியுடன் விதைத்துள்ளேன். விதையாக இல்லாமல் விருட்சங்களாக விளையட்டும் அவை. ஆய்வுகளும் தேடல்களும் அதிகரிக்க அதிகரிக்க அவற்றின் ஆழங்களையும் பற்றியே செல்கின்றேன், தொடர்கின்றேன். எளிய கவி உருவங்களாய் பரிணாமமாவதைக் காண்கிறேன். சமூக உளவியலாளனாய் சங்கமித்தாலும் சங்கதிகள் பலவற்றைச் சரித்திரமாய்க் காட்டியுள்ளேன். பிள்ளைகளும் வாசித்துப் பெருமகிழ்வு கொள்ளவெனக் கிள்ளைபோல் இவற்றை இலகு தமிழில் தொகுத்துள்ளேன். வருங்கால மகவுகளும் வாஞ்சையோடு இவற்றை வாசிக்கக்கூடிய முறையில் ஆக்கியுள்ளேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் புலத்தில் மடிந்த மாவீரர், கல்லறைகள், போர்க்கால அவலங்கள் போன்றனவும் என் கவிக்கடலில் மூழ்கிய முத்துக்களாயுள்ளன. என் கவிகள் வானலையில் வருகையில், என் கவிக்குக் கிடைத்த பாராட்டும் விமர்சனமும் பலப்பல. பலரின் பாராட்டும் ஊக்கமுமே என்னைக் கவிப் பரப்பிலும் உயர்த்திச் சென்றன. ஊக்கமும் உற்சாகங்களும் மனதை நிறைக்க, முயற்சியும் உயர்ச்சியும் முனைப்புடனே எழுந்தன. பல கவிக்களங்களிலும் பங்குகொண்ட கவி வரிகளும் கலந்தே கிடக்கின்றன. இனிமையான எங்கள் இன்பத் தமிழை இடம்பெயர்ந்தாலும் நாம் அழிய விடலாமா?

வேரான எங்கள் மொழி எங்கு சென்றாலும் எடுத்துச் செல்லப்பட வேண்டும். எதிர்கால வாரிசுகளும் வளமாக எம்மொழியை வளர்க்க வேண்டும். ஒற்றுமையான ஒரு சிகரத்தின் கீழ் ஓரணியில் செயற்படத் தமிழால் ஒன்றிணைவோம். முனைப்புடன் எழுவோம். முடிவான சுதந்திர தமிழீழம் பெற்றே வாழ்ந்திடுவோம். தாயகத்தில் என் கவிகளும் தரமான நூலாக ஒளிர்வு பெறுவதைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்கிறேன். மலர்ந்த இந்நூல் உங்கள் அனைவருக்கும் சுகந்தம் தரட்டும். தாயகத்தில் இந்நூல் அச்சில் வர அனைத்து உதவியும் புரிந்ததுடன் முன்னுரையும் தந்த, மூத்த அறிஞராய் எமக்கு அரும்பணியாற்றும் உத்தமர் யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். அணிந்துரையை அழகு தமிழில் தொடுத்து, எம்மையெல்லாம் வளர்த்துவரும் பெருங்கவிஞர் கலாநிதி கந்தவனத்திற்கும் (கனடா) என் நன்றிகள் உரித்தாகுக.

வாழ்த்துரைகளை வழங்கிய யாழ் பல்கலைக்கழக வர்த்தகத்துறை விரிவுரையாளர் தேவராசாவுக்கும் என் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

வாழ்த்துரையை வளமான தமிழில் உரமாகத் தந்து என்னை உயர்த்திய ஆசான் மஹாஜன கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு பொ. கனகசபாபதிக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறேன். அன்றும் இன்றும் என்றும் ஆலோசனையும் ஊக்கமும் தந்து உயர்த்தும் அதிபரை என்றும் நன்றியுடன் நோக்குகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் விஞ்ஞான விதையில் முளைத்த சிறு நாணல்தான் இக் கவியெனப் பெருமையுடன் கூறுகின்றேன்.

என் கவிமலருக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து உயர்த்திய அனைத்து உள்ளங்களையும் ஆழமாய் நேசிக்கிறேன்.

அழகிய ஓவியத்தால் இந்நூலினை அழகுபடுத்திய ஓவியர் ரமணி அவர்களுக்கும் என் கவி வரிகளை அழகுற அச்சு வடிவில் அமைத்துத் தந்த அச்சகத்தாருக்கும் என் நன்றியை தெரிவிக்கின்றேன். அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்புத் தந்த கணவருக்கும் நன்றிகள் உரித்தாகுக.

பெற்ற தாயும் பிறந்த நாடும் நற்ற வானில் நனி சிறந்ததே. அந்த வகையில் தாய் மண்ணில் இந்நூல் மலர்ந்து அரங்கேற்றம் காண்பதையிட்டு அக மகிழ்கிறேன். முனைப்புடன் இந்நூல் உங்கள் கரங்களில் தவழட்டும்!

நன்றியுடன்
**நகுலா சிவநாதன்**
ஆசிரியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆசிச் செய்தி | ..................... 5 |
| முகவுரை | ..................... 8 |
| வாழ்த்துரை | ..................... 12 |
| அணிந்துரை | ..................... 16 |
| வாழ்த்துரை | ..................... 24 |
| என்னுரை | ..................... 28 |
| விநாயகனே ! | ..................... 39 |
| உடை உடை | ..................... 41 |
| எமக்குள் ஏன் முரண்பாடுகள்? | ..................... 42 |
| புலம்பெயர்ந்தவர்கள் | ..................... 44 |
| படையலிடு சமாதானப் .... | ..................... 46 |
| ஓ! கார்த்திகைப் பூவே! | ..................... 48 |
| மறக்கலாமோ? சொல் மனமே! | ..................... 50 |
| கேள்விக்குறியாகும் தமிழின் ..... | ..................... 51 |
| உலகை உலுப்பும் சாசே! | ..................... 53 |
| இன்று இதுவும் காதல்தானா! | ..................... 55 |
| நீரின்றி நீர் செய்த யாகம் | ..................... 57 |
| இன்று வேரூன்றி வாழுது ..... | ..................... 57 |
| கம் நகர் காமாட்சியே! | ..................... 59 |
| பொதுநூலக அழிப்பு நாள் | ..................... 60 |
| வழி தொலைத்திட்ட ..... | ..................... 62 |
| அதிகாலை நேரம் | ..................... 64 |
| அறியாமை | ..................... 66 |
| காதல் | ..................... 69 |
| விரிசல் | ..................... 71 |
| உழைப்பவர் திருநாள் | ..................... 73 |
| இன்னும் என் காதில் ..... | ..................... 75 |


முளைப் புடன் எழு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்ப்பரித்த கடலிலே ..... .......... 77
நேரம் .......... 79
போச்சு போச்சு எல்லாமே போச்சு .......... 81
இத்தனை நாள் எங்கிருந்தாய்! .......... 83
தாயகம் .......... 85
அது பாரும் அந்தக் காலம் .......... 87
பொங்கல் .......... 89
பொங்கி எழு தமிழினமே! .......... 91
சமாதானம் .......... 92
புறப்படு தமிழா! .......... 94
பாரதி .......... 96
ஆடியில் ஆனதென்ன ....? .......... 98
புண்ணியம் எதுவெனப் ..... .......... 100
நல்லவராக வாழ்ந்திடுவோம் .......... 102
விடியல் தான் பிறக்குமா....? .......... 104
பண்டாரவன்னியனே ! .......... 106
தமிழீழம் எங்கள் தாயகம் .......... 108
ஓ மாமனிதர்களே! .......... 110
சுதந்திர விடுதலை நோக்கி..... .......... 112
வாய்ச்சொல்லில் வீரரடி! .......... 115
எனக்கு மட்டும் ஏன் இப்படி..... .......... 118
சோக நினைவுகளை நினைவில் .......... 120
உறவின் உயிராக..... .......... 122
கேளாயோ உலகமே!..... .......... 124
என் எண்ணமெல்லாம் நீயாக! .......... 126
நசுக்கிட நசுங்கிடா பேனா முனை! .......... 128
பெருமையுடன் வாழ்! .......... 129
தீ பந்தத்தால் வளருமா? பாசம் .......... 130
வேண்டும் வேண்டும் .......... 132
உன்னத ரம்ழானே! .......... 133
எழுகின்ற காலையே! .......... 134
வருக வருக புத்தாண்டே! .......... 136
அமைதித் தையாய் வாராயோ? .......... 139
யாருக்கு மேதினம் .......... 141
பாரதி நீ ஒரு சாரதி .......... 143
இளைய தலைமுறையே ..... .......... 145

முனைப்புடன் எழு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலரட்டும் புது நம்பிக்கை ........................................ 149
புலத்தின் இனமொழி ..... ........................................ 151
எனக்குள்ளும் வந்தது வசந்தம் ........................................ 153
ஆண்பாதி பெண்பாதி ........................................ 155
தமிழின விடிவிற்காய் ..... ........................................ 156
மலர்ந்திட்ட தைமகளே! ........................................ 158
வெற்றிமணி ........................................ 160
சாம்பலிலே உதிக்கும் அறிவுக்கதிர் ........................................ 165
தமிழர் தீர்வில் தடையா...? ........................................ 167
உறங்காத விழிகள் இவர்கள் ..... ........................................ 169
இரண்டாயிரத்தில் ஈழம் ........................................ 171
அதுவா? இதுவா? ........................................ 172
தியாக திலீபனே! ........................................ 174
புதுமைகள் காவி வருக! ........................................ 176
தஞ்ச மறுப்புக் கடிதம் ........................................ 178
பாடுங்கள் பார்க்கலாம்..... ........................................ 180
தாயின் நினைவும் தாயக நினைவும் ........................................ 181
வெற்றித் தமிழ் ........................................ 183
நல்லை நகர் நாவலரே! ........................................ 187
அலை அலையாக . . . . ........................................ 189
இன்னும் இன்னும் ..... ........................................ 191
நமக்கென்றும் நாலு பேர் ........................................ 193
வல்லான் வடிவேலனே! ........................................ 195
சுதந்திர ஒளி தரும் சூரியனே! ........................................ 197
முதலெழுத்தாய் முத்திரை ..... ........................................ 199
'மனதை மயக்கிய மாலைக்காட்சி ........................................ 201
இன்றிந்த காற்றலைகள் ..... ........................................ 203
மீன் பாடும் தேனாட்டில் ..... ........................................ 205
தாயகத்தைக் காத்திடுவோம் ........................................ 207
பாரதி இன்றிருந்தால்..... ........................................ 209
இளைய தலைமுறையே எழுந்திரு! ........................................ 212
விழலுக்கு இறைத்த நீரல்ல ..... ........................................ 217
கறுப்பு யூலையே! ........................................ 219
கல்லறைகள் மீண்டும் ..... ........................................ 221
விடுதலை! விடுதலை! விடுதலை! ........................................ 223



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகனே!

விநாயகனே! வினை தீர்க்கும் ஆனைமுகனே!
விக்கினங்களின் தலைவனாய் விளங்குபவனே
வீரம் கல்வி விளைந்திட நீயும்
நாளும் எமக்கு அருள்வாய் நாயகனே!

முக்கண்ணன் சிவனுக்கு மூத்தவனாய்
முந்தியே பிறந்திட்ட தலைவனே!
முதல்வனாய் பெற்றோரே உலகமென்றிட்டு
முக்கனியை முதலில் பெற்றாயே!

அன்பே உருவான ஆனைமுகனே!
அர்த்தங்கள் பலவாக உன் திருமுகமே
எத்திக்கும் எச்செயலும் திறம்பட ஆற்றவே
எப்போதும் எமக்கருளும் ஆனைமுகன் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்காரச் செல்வனே ஒன்றே உலகமானவனே!
நீங்காது வணங்கினால் நித்தமும் நன்மை
புரிவாயே
பாங்காக இவன் தாள் பணிவோருக்கு
பலன்கள் யாவும் சேருமே எப்போதும்

மூன்றுமுறை குட்டியே முதல்வனே உன்னை
மூன்று நேரம் தொழுதிடுகின்றேன் - விநாயகனே
வில்லங்கமொன்றும் வீடுதேடி வராமல்
விளைவாக நல்லறங்கள் புரிந்திடு நாயகனே!

கல்வியும் செல்வமும் கடைக்கண்ணால் உன்
பார்வையும்
மெல்லமாய் என்னிடம் தந்தருள்வாய் நீயே!
செல்லமாய் உன்னைத் தஞ்சமுடன் வேண்டியே
செப்புகிறேன் இக்கவி நூலாகத் தாயகத்தில்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடை உடை

முடியோடு தேங்காயை
முனைப்புடன் எடுத்து
முதல்வன் விநாயகனுக்கு
முதலில் உடைத்து
முயன்று உன் செயலைத்
தொடங்கு . . . . .
வெற்றி என்றும் நிச்சயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமக்குள் ஏன் முரண்பாடுகள்?

சுற்றும் பூமியை முற்றும் பார்!
சுழன்றடிக்கும் காற்றை ஒரு கணம்
நிமிர்ந்து பார்!
எறிக்கும் சூரியனை ஏறிட்டுப் பார்!
எமக்கு ஒளி தரும் நிலவைப் பார்!
இவற்றுள்ளும் முரண்பாடுகள் முளைவிடுகிறதா?
இயற்கையின் விந்தையைப் பார்!
இவையெல்லாம் எமக்கு கற்றுத் தரும்
பாடங்களைப் பார்!

ஒற்றுமை ஒன்றையே ஓங்கிக் காட்டுகிறது.
ஓரணியில் எம்மை செயற்பட வைக்கின்றது.
ஏ! மனிதா உனக்கு மட்டும் ஏன் முரண்பாடுகள்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறறிவு படைத்த இனமென்று அகிலத்தில்
பெருமை கொள்கின்றாய்!
நூலறிவு படித்து நுண்ணறிவுகளைப்
பெறுகின்றாய்!
அணுவைத் துளைத்து அறிவைப் புகட்டுகிறாய்
அதிலும் உள்ளே இலத்திரனைக் காட்டுகிறாய்
புரோத்திரனையும் சேர்த்து புதியவற்றைப்
படைக்கின்றாய்
இத்தனையும் கண்டு இனிமையும் கொள்கின்றாய்
இதற்குள்ளும் உனக்கு ஏன் முரண்பாடு?

பண்பாடு இல்லா வாழ்வாய் பரிதவிக்கலாமா?
பழந்தமிழர் எனப் பெருமை கொள்ளலாமா?
மனிதா? முரண்பாடு ஏன்?
மனிதா? உனக்குள்ளும் ஏன் முரண்பாடு?

முரண்பாடு இல்லாமல் எழுந்திடு!
முனைப்புடன் பண்பாட்டைக் காத்திடு!
விடுதலை ஒன்றையே ஓங்கிப் பெற்றிடு!
வீரத்தமிழினம் என்ற பெருமையைப் பெற்றிடு!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்தவர்கள்

புலம்பெயர்ந்தவர்களாய் இன்னமும் நாங்கள்
புகலிட தஞ்சத்தில் அடைப்பட்ட குஞ்சுகளாய்
புலமிழந்து நிலமிழந்து நிம்மதி தானுமிழந்து
நிர்க்கதியாய் நிற்கிறோம் அன்னிய நாட்டிலே.

அவலங்கள் அநியாயங்கள் அகத்திலே சுமந்து
அடுத்த சந்ததியை அணைத்தே நாம்
அந்தரத்தில் வாழ்கிறோம் அமைதியே இல்லாமல்.

போரும் பொழுதும் ஏற்படுத்திய தாக்கம்
வேரும் விழுதுகளாய் தக்க வைக்க ஊக்கம்
அடுத்த சந்ததி எடுத்து எம்மொழியை
அணைத்துப் பாடுமா? ஏங்குது இதயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் மாற்றம் கன்னித்தமிழிலும் மாற்றம்
கடுகதியாய் வளருது தமிழின் வளர்ச்சி
வானொலி பத்திரிகை வளமான படைப்புக்கள்
வளருது தினமும் புலம்பெயர் வாழ்விலே.

புலம்பெயர்ந்தாலும் எம்மொழி வளருது
குலமதன் பெருமையை மழலையும் சொல்லுது
பலமொழி பேசும் சமுதாயம் வளருது
பல்லின நாடுகளில் தமிழின் புகழ் ஓங்குது.

தமிழ்க்கடை தமிழ் பொருட்கள் புலப்பரப்பிலே
தனியான தமிழனாய் தனக்குள் ஓட்டம்
மழலைகள் மணிமணியாய் தமிழில் ஊக்கம்
மங்காத தமிழிலே தீவிர நாட்டம்.

பல்மொழி சமுதாயம் புலப்பெயர்விலே
பாங்குடன் வாழ்வோம் தாயகம் நோக்கியே
பலமொழி சமுதாயம் புலப்பெயர்விலே
பாங்குடன் வாழ்வோம் தாயகம் நோக்கியே.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையலிடு சமாதானப்
# படையலிடு

படையலிடு படையலிடு சமாதானப் படையலிடு
படைகளைத் தடைகளைத் தகர்த்துப் படையலிடு
புத்தாண்டுப் படையலிடு புதுவாழ்வுப்
படையலிடு
வித்தாக சமாதானம் விளைய எங்கும் படையலிடு
சொத்தாக ஈழபூமி சொர்க்கமாகப் படையலிடு
படையலிடு படையலிடு சமாதானப் படையலிடு
பட்ட அவலங்கள் பனிபோல் அகலப் படையலிடு
பார் முழுக்க போர் ஓயப் படையலிடு
ஏர் உழவர் ஏர் பிடிக்கப் படையலிடு
போர் நிறுத்தம் ஓயும் வரை படையலிடு
யுத்த நிறுத்தம் யுகமாய் வளரப் படையலிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய யுத்த வடுக்கள் பொடிப்பொடியாகப்
படையலிடு
கொன்றொழிக்கும் இராணுவம் இல்லாதிருக்கப்
படையலிடு
படையலிடு படையலிடு சமாதானப் படையலிடு.

பக்குவமாய் பேச்சுவார்த்தை பயனளிக்கப்
படையலிடு
பட்டினிச் சாவு விட்டொழியப் படையலிடு
பட்டதுயர் யாவும் பறந்தோடப் படையலிடு
நோர்வேயின் பேச்சுக்கள் ஆக்கங்களாகப்
படையலிடு
ஒற்றுமைக் கரம் பற்றி ஒன்றுபடப் படையலிடு
வேற்றுமைகள் யாவும் வேரோடு அழியப்
படையலிடு
படையலிடு படையிடு சமாதானப் படையலிடு.

பற்றுவோம் சமாதானம் வென்றிடுவோம்
தமிழீழம்
பக்குவமாய் படையலிடு பைந்தமிழர் வாழ்ந்த
மண்ணில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ! கார்த்திகைப் பூவே!

**மா**ரி மழையுடன் மகிழ்வாய் நீயும்
கூடிக்கூடி வந்திடுவாயே!
வயல்களிலே வெள்ளம் பாய
களத்து மேட்டு நெல்லும்
உன் கவி பாடிடுமே!

குளிர்காற்று வீசலிலே, ...
குளிரான உன் பூ வாசம்
குளிர்மையாய் அமைந்திடுமே!
குளிரோடு நீ வருவாய்! குதூகலமாய் எப்போதும்!
விழிகளிலே நீர் அருவியோடு
மாவீரர் கல்லறை நனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருளான காலத்து உதயமே - நீ
சிவப்போடு மஞ்சளுமாய் சிரித்திருப்பாய்!

ஓ! கார்த்திகைப் பூவே!
இருளகற்றி வாசல் தோறும்
வண்ண விளக்குகளாய் அலங்காரம் இங்கே!
கார்த்திகை நெய் விளக்கிலே .....
காலமெல்லாம் நகர்வு அங்கே!

தேசிய மலரான கார்த்திகையே! - எம்
தேசத்தின் விடிவிற்காய் மலர்வாயோ!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கலாமோ?
# சொல் மனமே!

அன்னை மடியில் அயர்ந்து தூங்கி
பென்னம் பெரிய நிம்மதி பெற்று
சின்னஞ்சிறிய கதைகள் பேசி
சிரித்து மகிழ்ந்த காலம் - சிதறித்தான் போனதே!
நித்தம் அந்த மண்ணிலே
முத்தம் தந்த அம்மாவுடன்
சுற்றஞ் சூழச் சுற்றியிருந்து
வித்தை பெற்ற காலங்கள்
விரைந்து தான் வருமோ
மகிழ்ந்த அந்தக் காலம்
நெகிழ்ந்த அந்தப் பொழுதுகள்
மறக்கலாமோ? சொல்மனமே!
மறக்கலாமோ சொல்மனமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விக்குறியாகும் தமிழின் எதிர்காலம்

**ப**ட்டாம் பூச்சியாய் பரிணமிக்கும் சிறார்கள்
சிட்டாகப் புலம்பெயர் வாழ்விலே சிறகடிப்பு
மொட்டாக வளர்கையிலே மொத்தமாய்த் தமிழை
கட்டாக விட்டுக் கணினியில் நாட்டம்.

கொஞ்சும் தமிழைக் கொஞ்சியே ஊட்டி
தஞ்சமாய் வளர்த்தாள் தாயும் அன்று
நெஞ்சமது குளிர்வுகொள்ள பஞ்சமே இல்லாமல்
பிஞ்சு உள்ளமாய் வளர்ந்தார்கள் அன்று.

இருபது வயதின் பின் இன்பத்தமிழ் பேசப்படுமா?
என் இதயத்தில் எழுந்தது வினா ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்களும் தொடர்களாய் தொடர்ந்தன மனதினில்
இருபதின் பின் இன்பத்தமிழ் இங்கு ஏன்?

எழுந்தனர் இளைஞர் எரிமலையாக
காரணம் கேட்கக் கனதியாய் பதிலும் வந்தது
நேரமோ குறுகுது பாடமோ விரியுது
பாரமாகுது படிப்பு வாரமாகுது வகுப்பு.

தனித்தமிழ் கிடைத்தால் தளமது அமைப்போம்
இனித் தமிழ் வேண்டும் இதயத்தில் ஏற்றுவோம்
சிறப்பான தமிழ் தளம் அமையாவிட்டால்
சிதறுண்டு போகுமோ? எம் இனம்.

தமிழின் எதிர்காலம் கேள்விக்குறியா?
தரணியில் எம் மொழி அழிவதா?
எதிர்கால வாழ்விற்காய் தமிழ்தளம் அமைப்போம்
எம்சிறுவர் வாழ்விற்காய் எதிர்நீச்சல் போடுவோம்!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகை உலுப்பும் சாசே!

புகுந்து விட்ட சாசே! புதுமையான நோயே!
விருந்து படைக்க வந்தாயா? உயிரைக் குடிக்க வந்தாயா?
புலத்திலும் சாஸ் பரம்பல் புதுமைகள் பல படைக்குதாம்
தொற்று வியாதியே! தொல்லை தரும் சாசே!
எல்லையில்லாப் பரப்பெங்கும் ஏப்பம் விடுகிறீரே!
சிறுவரைத் தாக்கியே சீற்றம் கொள்ள வைக்கிறாய்
பெரியவரைத் தாக்கியே பேராபத்து விளைவிக்கிறாய்
பொல்லாத சாசே! பேய் உருவம் நீ தானோ!
சொல்லாமல் கொள்ளாமல் சோதனையும் செய்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெல்லாமல் விழுங்காமல் மேலுயரக் காய்ச்சலாம்
நாற்பதில் காய்ச்சலாம் நரம்பெல்லாம் நடுங்குதாம்
காப்பதிலே மருந்தும் கூடக் கண்டுபிடிக்க
வில்லையாம்
சீன மண்ணிலே சிதைந்த அழுக்கிலே
தோன்றினாயா?
வீணாக மக்களை விரட்டுகிறாய் உன் நோயால்.
பொல்லாத சாசே! புறத்தே நீயும் போய்விடு
உண்ணாமல் உறங்காமல் உயிரையுங்
குடிக்கின்றாய்.
விட்டால் உன் பெருக்கம் விண்வரை கூடுமாம்
தொட்டாலே நீயும் சிட்டாக ஒட்டிடுவாய்
தோழியர் இப்போ கூடுவதே இல்லையாம்
தோல்களில் கையும் படுவதுமில்லையாம்
காதலில் கூட முத்தமும் இல்லையாம்
கைகளும் கூட அணைப்பதும் இல்லையாம்
கண்ணால் கூட பார்க்கவும் முடியவில்லை
கருமியே! சாசே! நீ விரும்புவது என்னவோ?
நுரையீரல் உன் வரவால் நோயானதம்மா!
நுழையும் உன் பெருக்கம் சிற்றறைகள் எங்கும்
தரையிலும் தாவிப் பரவிடுவாய் பலமாக
தந்திடுவாய் நோயாக தப்பவும் முடியவில்லை
பொல்லாத சாசே! புறத்தே போயிடுவாய்
வெல்லாது உன் வேகம் எல்லாமே இங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இதுவும் காதல்தானா!

இணையத்துக் காதல் இதை இதமான காதலென
உதயத்து உணர்வுகளை உள்ளத்தில் இருத்தி
கணினியில் புகுந்து இணையத்தில் இணைந்து
கருவூட்டும் காலம் இந்தக் கலியுக காலம்
புதுப்புது மெருகூட்டி பூமிக்குள் ஆயிரம்
பூவையர் வாழ்வு புகலிடத்தில் புதுமையன்றோ
குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயுமென
இனித்த அந்த இணையத்து காதலில்
இன்ப உணர்வுகளைத் தொலைத்து ....
படிப்பை பாதியில் நிறுத்தி பாழாப்போன காதலில்
மாளாகிப் போனோர் பலர்
இன்று இதுவும் காதல் தானா ....?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்பின் தெரியாது முக அழகை முழு அழகென
நம்பி
முனைப்புடன் இணைத்திடும் இனிய காதல்
முணுமுணுப்புடன் பிரிவதேனோ? ...
இன்று இதுவும் காதல் தானா ... ?
பல செருப்பு தேய்ந்து பாதி கலியாணம்
நிறைவேறியது அன்றைய காலம் ...
ஆனால் ...
இன்றோ செருப்பும் தேயாமல் விருப்பும்
மாறாமல் ...
ஒய்யாரமாய் ஓடிடும் மௌசால் ஓங்கிடும் காதல்
மௌஸ் (Mouse) ஓடி ஓடி மாப்பிளை தேட
பவுசு அப்பாக்கு வர கொலுசைப் பரிசாக
கோமகனும் அளிக்க கொண்டாடும் காதல் இது
இதுவும் காதல் தானா...? இன்று
இதுவும் காதல் தானா...?

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீறின்றி நீர் செய்த யாகம் இன்று வேரூன்றி வாழுது நம் தேசம்

உண்ணா நோன்பிருந்து உலகிற்கு காட்டிய
உத்தமனே!
மண்ணின் மீதுள்ள பற்றாலே உன் உயிரைத்
துறந்தாயே!
நீரின்றி நீர் செய்த யாகம் பார் எங்கும் பரவுது
பாரீரே!
போர் இன்று ஓய்ந்து பொன்னான அமைதிக்காய்
ஏங்குது
ஊர் எங்கும் எழுச்சி பார் எங்கும் சமாதானம்
வேரோடு இருக்குமா? இல்லை
வேறுபட்டுத்தான் போகுமா?
அரசியல் குழப்பங்கள் அடுத்தடுத்து பிரச்சனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டமும் பாட்டமுமாய் அல்லல்படும் தேசம்
இன்று
வாட்டமாய் எம் வாழ்வு வாடிக்கிடக்கையில்
நோட்டமாய் சில தீர்வை நோக்கமாய்
வைக்கின்றனர்
எத்தனை தீர்வை எடுத்துத்தான் வைத்தாலும்
அத்தனையிலும் அமைதித் தீர்வு
அமைந்திருக்குமா?
நீரின்றி நீர் செய்த யாகம் இன்று வேரூன்றி
வாழுது நம் தேசம்
பாரின்றி நாம் வாழ்தல் ஆகுமா? பட்டினிதான்
எம்மை விட்டுப் போகுமா?

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம் நகர் காமாட்சியே!

**கா**மாட்சியே எங்கள் மீனாட்சியே
கருணைக்கடலே கம் நகர் காமாட்சியே
அகதியாய் வந்தோரை அரவணைத்தாயே
அமைதியும் எமக்குத் தந்தருளினாயே
புதுமையாய் புதுமனை புகுந்திட்டாயே
பெருமையாய் பேரருள் புரிவாயே
அன்னையே எம்மைக் காத்திடம்மா
அம்பாளே உன் கருணை பெரியதம்மா
அகில உலகை ஆளும் அன்னையே
அனைத்து இடர்களையும் தீர்த்தருள்வாயே
சிற்பமாய் சிங்கார அழகு சிலையானாய்
சிறப்பான உன் வீடு தங்கக்கோயிலம்மா
பத்தனாய் உன்னடி பணிந்தோமோ - தாயே
பக்தியாய் எம்மிடம் உறைவாய் நீயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுநூலக அழிப்பு நாள்

ஆசியக் கண்டத்தின் அரும்பெரும் நூலகம்
அறிஞர்கள் பலர் கூடிக் கட்டிய அறிவகம்
மாட்சிமை மிக்க மகத்தான பொதுநூலகம்
மங்காத தமிழரின் அறிவான கல்வி அகம்
தங்கத் தமிழனின் சொத்து அது
தன்மானத் தமிழனின் உயர்ச்சி அது
திட்டமிட்ட சிங்கள அரசின் தீ வைப்பால்
81 மே மாதம் 31 இல் நள்ளிரவு நேரம்
தீக்கிரையானது எங்கள் அறிவுப்பெட்டகம்
அக்கினிக்கு ஆகுதியாகி அழிந்தது தமிழனின்
சொத்து
கல்வியின் கருவைச் சிதைத்தனர் கொடியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும்புகையில் பொசுக்கினர் எங்கள் சொத்தை
சிங்கள காமினியின் சிரங்கெட்ட செயலால்
சின்னாபின்னமாகியது சிறப்பான நூலகம்
வல்லான் பலரை வாழ வைத்த கல்விச் சொத்தை
வகையாகத் தீ மூட்டிப் பொசுக்கினர் காடையர்
சங்க காலச் சான்றோர் தேடிய அறிவுச் சொத்து
சரித்திரம் இன்றிப் போனது இப்போ
நூலகம் என்ற யாழ் அகத்தை மீண்டும்
பொது நூலகமாக்கிட முனைப்புடன் எழுவோம்.
நூலகம் என்ற யாழ் அகத்தை மீண்டும்
பொது நூலகமாக்கிட முனைப்புடன் எழுவோம்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி தொலைத்திட்ட விழிகளுக்காய்!

**தீ**பங்கள் ஏற்றித் தீந்தமிழ் பாடி
புத்தாடை அணிந்து மத்தாப்பூ கொளுத்தி
மகிழ்ந்திருந்த தீபாவளி மறைந்ததோ?
ஆலயமணி கேட்க அடுக்குச்சட்டை போட்டு
ஐவகைப்பூ எடுத்து ஆலயம் சென்று
அர்ச்சனை செய்து ஆலாத்தி கண்ணிலொற்றி
ஆனந்தமாய் அகமகிழ்ந்திருந்த காலம்
அடுத்து தான் வருமா... ?
இராணுவம் புடைசூழ எதிரிகள் சுற்றியிருக்க
இனிய இராகத்தை முகாரிராகமாக
இசைக்கும் சோகநினைவுகளைச் சூடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருட்டுக்குள் வாழும் உள்ளங்களுக்காய்
வழி தொலைத்திட்ட விழிகளுக்காய்
வறுமையில் வாடும் வண்ணமலர்களுக்காய்
வறுமைகள் அகல வெறுமைகள் நீங்க
வளங்கள் பெருக மனங்கள் மகிழ
வண்ணக் கவி தொடுத்து வாழ்த்துவோம்
வருகின்ற இத் தீபாவளி நாளிலே!
பிறக்கின்ற தீபாவளி நல்லனதந்து
வல்லன பெருக வழிதரவேண்டுமென
வாழ்த்தி விடை பெறுவோம்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலை நேரம்

**அ**திகாலை வேளையில் அணைத்திடும் நேரம்
இதமான காலையில் இனித்திடும் நேரம்
இதயத்து உணர்வுகளை உதித்திடும் நேரம்
உதயமான காலையில் ஒலித்திடும் நேரம்
பொன்னான பொழுதிலே பொங்கிடும்
எண்ணங்களை
மங்காமல் கூறி மட்டில்லா மகிழ்வு தந்திடும் நேரம்
கட்டி அணைத்திடும் கணப்பொழுது நேரம்
சுற்றம் உ றவுகளைச் சுண்டியே இழுத்து
ஏற்றம் பெறவைக்கும் எழுச்சி நேரம்
ஏற்றங்கள் கருத்துக்கள் மாற்றங்கள் மகிழ்ச்சிகளை
கூட்டமாய் ஆய்ந்திடும் குதூகல நேரம்
வாட்டமாய் சிறுவர்களை வளர விடாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டமாய் தமிழிலே நன்மைகள் பெறவைக்கும்
தேட்டமான சொத்து எங்கள் இலண்டன் ரைம்

தேனாக இனிக்கின்றது தெவிட்டாமல் எமக்கு
பொன்மொழி அனுபவக் குறிப்பு கவிதையென
பொங்கிடும் எண்ணங்களை எழுத்திலே
வடித்திட்டு
கருத்துக்களைக் காவி வரும் களிப்பான ஊடகம்
எங்கள் இலண்டன் ரைம் ....

குதூகலமாய் குழவியுடன் குட்டித்தாய்மாரும்
எட்டித் தமிழை எடுத்தடி வைத்திட
கொடுத்திடும் களமாய் குலவிடும் நேரம்
எங்கள் இலண்டன் ரைம் ......

வளர்ந்தனர் கவிஞர் வளர்ந்தது தமிழ்
உதித்தது சிந்தனை உதயமாகியது புதுப்புது
அனுபவங்கள்
நிறைந்தது அனுபவ அறிவு குறைந்தது அரட்டல்
மலர்ந்தன மனங்கள் மகிழ்ந்தன குதூகலங்கள்
இத்தனையும் அளித்திட்ட இனிய நேரம்
எங்கள் இலண்டன் ரைம்.....

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமை

அறியாமையெனும் அகல்விளக்கை
அடியோடு அகற்றி வை
அறிவெனும் சுடர் விளக்கை
அணையாமல் ஏற்றி வை
அறியாத புரியாத விடயங்களை
அறியும் படி விளக்கிடு
இருளான ஆணவத்தை
இனிதாக ஒடித்து விடு
அறியாத சொல் கேட்டு
அவதி என்றும் கொள்ளாதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரியாத சொல்லாலே
புழுதி வாரி இறையாதே
தெரியாத விடயங்களைத்
தெரிந்துமே கேட்டிடு
விரிவான விளக்கங்களை
விளங்கியே தெளிந்திடு

மாயையாலே மனக்கதவை
மூடி விடாதே
மாற்றானை நண்பனென
ஏற்றிடாதே
தேனான உன் வார்த்தை
தேசமெல்லாம் பரவியே
வீணான மனக்கிலேசம்
வீம்பாகக் கொள்ளுதே

நண்பியென ஏற்றிவிட்டு
நடுத்தெருவில் விடலாமே!
வம்பு என்ன பண்ணிவிட்டாள்
வஞ்சிப்பது முறைதானோ?
இடையில் வந்த கொடையாலே
வீண்வாதம் கொள்ளலாமே?
இனிதான உறவும்
இதனாலே பிரியலாமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையில் மாற்றம் உள்ளதென்றால்
உள்ளுணர்வு மாறுமா?
இல்லாத பழியெனக்கு
இப்பவும் சூட்டாதே
இதமான என் இதயம்
இரக்கத்தால் ஆனதம்மா
கனமான சொல் கேட்டு
கனதியாகுது என் மனசு
கதிகலங்கி நிற்கிறேன்
கவலைகள் பல

தோழியென்று சொல்லியே
ஆழியாகக் கொண்டேனே!
வாழியென்று வாழ்த்தியே
வம்பும் பல பண்ணுவேன்
செய்யும் செயல் நல்லதெனச்
சிந்தித்தே செயற்படு
சொல்லாமல் போகிறாய்
சோகம் எனை வாட்டுதே
நல்லாக சிந்தி
நன்மைகள் பல உண்டே!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல்

பள்ளியிலே காதல் படிப்பிலே காதல்
புள்ளியில் காதல் பூக்களில் காதல்
கொள்ளை அழகில் காதல்
கிள்ளைப் பேச்சில் காதல்
காதல் காதல் காதல்
காதல் இன்றேல் சாதல் சாதல் சாதல்

மண்ணிலே காதல் மதத்திலே காதல்
விண்ணிலே காதல் விளையாட்டிலே காதல்
எண்ணிலே காதல் எடையிலே காதல்
எமக்களிக்கும் உணவிலே காதல்
நாட்டிலே காதல் ஏட்டிலே காதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலே காதல் பாட்டிலே காதல்
விளைந்திடும் பயிரிலே காதல்
கன்னித் தமிழில் காலமெல்லாம் காதல்
கனிதரும் பழத்தினில் வாயூறக் காதல்
மொழி தரும் இனிமையில் காதல்
மோகனப் புன்னகையில் காதல்
காதல் காதல் காதல்
காதல் இல்லா காரியம் இல்லை
காதல் இல்லா வாழ்வும் இல்லை
இதுவும் காதல் தானா?
இதுவும் காதல் தானா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிசல்

**தா**ரமான பெண்ணுக்கும் தாய்மைக்கும் விரிசல்
பாசமான அண்ணனுக்கும் நேசத் தங்கைக்கும்
விரிசல்
தாங்காத மனதிற்கும் நீங்காத நினைவிற்கும்
விரிசல்
தூங்காத நினைவிலும் தூக்கம் மறுக்கும் விரிசல்
பாங்காகப் பழகிவிட்டு பாதியில் பிரியும் விரிசல்
பக்குவமாய் உறவுடன் ஒட்டிடும் விரிசல்
பாசம் அன்பு பண்பு புரியாத விரிசல்
நாசம் செய்யும் நாளைய வாழ்விலும் விரிசல்
தேசம் இதனால் தோசம் பெறும் விரிசல்
வாசம் செய்வோம் விரிசலை விரட்டி ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமுடன் வாழ்வில் நெருங்கிடுவோம்
நேர்மையாய் வாழ்க்கை வாழ்ந்திடுவோம்
பாசமுடன் உ றவுகளை இணைத்திடுவோம்
பட்சமுடன் நல் வாழ்வில் உயர்ந்திடுவோம்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பவர் திருநாள்

**உ**ழைப்பவர் திருநாள் உலகத்தில் இன்று
உதித்தது அந்த நாள் மேமாதம் ஒன்று
பாடுபட்ட உள்ளங்களின் அமைதி நாள்
பாரெங்கும் கொண்டாடும் நன்நாள் அது.

நெற்றி வியர்வை சிந்தி உழைத்த மக்கள்
குற்றிய அரிசியை கஞ்சியாக்கி குடித்த நாட்கள்
தொழிலாளர் ஒன்றுசேர்ந்து தொடுத்திட்ட நன்நாள்
தொழிலாளர் எழுச்சி நாள் மேமாதம் ஒன்று.
தொழிலாளர் தினம் அது தொல்லையற்ற நன்நாள்
சரிசமமாய் மக்களை மதித்திடும் நன்நாள்
உழைத்த மக்களின் உரிமை நாள்
மேமாதம் வந்த மேதின நன்நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பவர் உலகமே ஒன்று சேர்ந்திடுவோம்
உரிமைகள் பலவும் பெற்றிடுவோம்.
உலக விடிவிற்காய் உழைத்திடுவோம்
உருளும் உலகில் அனைவரும் சேர்ந்திடுவோம்.

*தொழிலாளர்களே! வாழ்க!*
*தொல்லைகள் யாவும் ஒழிக!*

▣ ▣ ▣

*01.05.2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் என் காதில் .....

இன்னும் என் காதில் இனிக்குது
இதமான உன் அழைப்பு அம்மா
அரும்பாக என்னை ஆளாக்கினாய்
கரும்பாக கடமைகள் செய்திட்டாய்
வரம்பாக வாழ்க்கைக்கு கோடிட்டாய்
கரமாக எனக்கு கை கொடுத்தாய்
விருப்புடனே வளர்க்க நினைத்தாய்
பொறுப்புடனே செயற்பட வைத்தாய்

இன்னும் என் காதில் இனிக்குது
இதமான உன் அழைப்பு அம்மா
அகவை நான்கில் அடியெடுத்து வைக்க ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகால மரணம் உன்னை அணைத்ததோ?
அன்னை முகம் காண ஆவலாய் துடித்தேன்
ஆனால் நீயோ அகன்றே விட்டாய்!

அம்மா அம்மா அம்மா...
சும்மா நான் சொல்லவில்லை . . .
ஆயிரம் நினைப்பு என் மனதில்
அத்தனையும் சொல்லிவிடத் துடிக்கின்றேன்
ஆனால் இப்போ நீ இல்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்ப்பரித்த கடலிலே ஆகுதியானவனே!

கடுகதி பாய்ச்சலில் வேங்கையாய் எழுந்தவனே!
கடலின் அலையையும் எதிர்த்தே சென்றவனே!
ஈழமண்ணின் வீரமறவன் நீ
இங்கித தமிழுக்கு இதயம் நீ
உறவோடும் உரிமையோடும்
உறவாடிய உத்தமனே!

விடுதலைக்கு வித்திட்ட வீரத்திலகமே
எங்கள் கிட்டு அண்ணாவே!
நாடகம் செய்வாய் நடித்தும் காட்டுவாய்
ஓவியம் உனக்கு ஒளிக்கீற்று அண்ணா
ஆர்ப்பரித்த கடலிலே ஆகுதியானவனே!
சத்தியம், உண்மை, காந்தியம் வழி வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியத்தின் ஈனச் செயலால் கொலையாக்கப்
பட்டவனே!

காந்தியம் காடையரின் காலில் செத்தது
உண்மை உலகிற்கு வெளித்தது.
அறப்போரின் எல்லையைத் தொட்டவனே!
ஆழமாய் மக்களின் மனதை நிறைத்தவனே!
எங்கள் கிட்டு அண்ணாவே!

தமிழீழ மண்ணுக்கு நீ ஒரு வித்து
தங்கத் தமிழீழம் மீண்டிட
வந்த சொத்து.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம்

நெருங்கும் மணித்துளிகளால் வருந்தும் மக்கள்
சுருங்கிடும் வாழ்க்கைக்கு சுடர்களை ஏற்றுவோம்
நேரமோ நெருங்குது போருமோ துரத்துது
அமெரிக்க முதலையின் இனவெறியாட்டம்
அதிர வைக்குது அகில உலகை இன்று
ஈராக்கை தூளாக்க எமனாக படையெடுப்பா?
கூரான ஆயுதத்தால் குளித்திடும் இரத்தவெள்ளம்
வேராக வாழ்ந்த மக்களை வேறாக்கலாமா?
போரே வேண்டாமென கோஷங்கள் அதிகரிக்கும்
வேளை
போருக்கென வலிந்தழைக்கும் சண்டாளர்களே!
வருந்திடும் உயிர்களை எண்ணினரோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் எண்ணைக்கு இடர் இப்போ
வந்ததோ?
ஐ.நா கூற்றை அலட்சியம் செய்து விட்டு
வீணான போருக்கு வீம்பாக எழலாமா?
மண்ணிலே தோன்றிய மசகு எண்ணைக்கு
விண்ணிலே அதிரும் விசை குண்டால்
போட்டியா?
நேரமோ வருகுது போருமோ நெருங்குது
பாவிகள் நாம் பாதபூசை செய்கின்றோம்
ஏதுமற்ற ஏதிலியாய் போரிலே மக்கள்
மடியலாமா?
ஏதிலியாய் நாம் எதிர்கொண்டதே போராலே
ஏன்? இந்தப் போர் ....
ஏன்? இந்த ஈராக் மக்கள் எதிர்கொள்ள வேண்டும்
போருக்கு?
ஏன்? இந்த ஈராக் மக்கள் எதிர்கொள்ள வேண்டும்
போருக்கு?

▣ ▣ ▣

*19.03.2003*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போச்சு போச்சு எல்லாமே போச்சு

**போ**ச்சு போச்சு எல்லாமே போச்சு!
பொழுதுகள் வீணே கழிஞ்சே போச்சு
ஆச்சு ஆச்சு என்னாச்சு?

அக்காவும் அத்தானும் ஆமிக்கு இரையாச்சு!
அண்ணாவும் கனடாவில் அக்சிடன்ரில்
அவசரத்தில் ஓடி காலும் உடைச்சாச்சு!
அப்புவும் ஆஸ்மாவால் அடங்கியாச்சு!
ஆச்சியும் கிணற்றடியில் குண்டுக்குப் பலியாச்சு!
அனைவரும் எமனுக்கே இரையுமாச்சு!
அந்தரத்தில் வாழ்வு அநியாயமாச்சு!
அகதி வாழ்வே எமக்கு நியதியாச்சு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் அமைதியற்று அப்பவே போச்சு!
போச்சு போச்சு எல்லாமே போச்சு!

கூடுவிட்டு கூடுவிட்டு கூட்டமே கலைந்தாச்சு!
நாடுவிட்டு நாடுவிட்டு நாங்களும் அலைந்தாச்சு!
படிப்பும் பாதியிலே பட்டெனவே போச்சு!
பரிதாபம் எமக்கு படுபாதகமாய் ஆச்சு!
வடிவும் போச்சு வளமும் போச்சு
நிலமும் போச்சு நலமும் போச்சு!
நிம்மதியும் போச்சு நித்திரையும் போச்சு!
போச்சு போச்சு எல்லாமே போச்சு!
பொழுதுகள் வீணே கழிஞ்சே போச்சு!

▣ ▣ ▣

12.11.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இத்தனை நாள் எங்கிருந்தாய்!

**வ**சந்தகாலப்பொழுதே வண்ணமிகு வதனமே!
இத்தனைநாள் எங்கிருந்தாய் இனிய நல்பொழுதே!
கூட்டுக்குள் அடைபட்டு வீட்டுக்குள்
முடக்கப்பட்டு
வாசமில்லா மலராய் உன் வசந்தத்தை தேடினோம்.
கார்காலம் கழிந்து போர்க்காலம் ஓய்ந்து
இனிய நல்பொழுதாய் இனிமை தர
வந்துவிட்டாய்!
இத்தனைநாள் எங்கிருந்தாய் இனிய நல்வசந்தமே!
சிறுவர்க்கு மகிழ்ச்சி சிறப்பான உன் வரவுகண்டு
பெரியோர்க்கு மகிழ்வு பெருவசந்தம் எப்போ
என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகா! வசந்தமே வசந்தமே!
வந்துவிட்டாய்! வந்துவிட்டாய்!
தந்துவிட்டாய் தந்துவிட்டாய் புதுசுகம்
பொழுதுகள் புலர்ந்தனவே! விழுதுகள்
விட்டனவே!
வசந்தமே வந்தாய்! நல் சுகந்தமே தந்தாய்!
எத்தனை நாள் உன் வசந்தம் மேனியில் படவே
எதிர்பார்த்துக் காத்திருந்தோம்
விடைபெற்றுச் செல்லாதே!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

**தா**யைப் போற்றி மதிப்பு தந்தது தாயகம்
தன்மான தமிழினத்தின் வீரநிலம் தாயகம்
தமிழே உயிர் மூச்செென வித்திட்டது தாயகம்
உலகத்தில் உயிர்நாடி தாயகம்
ஊக்கமும் ஆக்கமும் உயர்ந்தவிடம் தாயகம்
பொன்போல தாயைப் போற்றியது தாயகம்
சாகாவரம் பெற்ற சரித்திர வீரர்களைத் தந்தது
தாயகம்
சண்டாளர்களை வீரமண்ணிலிருந்து விரட்டியது
தாயகம்
மாவீர மணிகளை மண்ணுக்கு தந்தது தாயகம்
மங்காத் தமிழன் பொங்குதமிழ் பேசியது தாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் விளைநிலங்களை வீரநிலமாக்கியது
தாயகம்
எதிரிகளை புறமுதுகிட்டு ஓடச்செய்தது தாயகம்
எக்காலமும் எல்லோரையும் இணைப்பது
தாயகம்
தாயகம் தாயகம் தன்மான தனிஅகம்
தரணியில் அதற்கு நிகர்தான் ஏது?

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அது பாரும் அந்தக் காலம்

**அ**து பாரும் அந்தக் காலம்
அலை மோதும் வசந்த காலம்
அவனியிலே மகிழ்ந்த காலம்
அது மேலும் வளர்ந்த காலம்
பள்ளிப் பருவத்து பருவ காலம்
பட்டாம் பூச்சியாய் பறந்த காலம்
பட்டணம் போய் படம் பார்த்த காலம்
பட்டாசு கொழுத்தி மகிழ்ந்த காலம்
முட்டாசும் வாங்கி மென்றிட்ட காலம்
முழு நிலவை ரசித்த முன்பனி காலம்
இது பாரும் இந்தக் காலம்
இவை யாவும் இழந்த காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகை இல்லாக் கருங் காலம்
புகை போக்கும் புனித காலம்
கை வளையல் கண்டது அந்தக் காலம்
கையிலே ஏகே தூக்கியது இந்தக் காலம்
களம் பல கண்டது இந்தக் காலம்
நிலம் பல வென்றது இந்தக் காலம்
அது பாரும் அந்தக் காலம்
அலை மோதும் வசந்த காலம்
இது பாரும் இந்தக் காலம்
இவை யாவும் நடக்கிற காலம்
இதனாலே இன்று இலையுதிர் காலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல்

**பொ**ங்கலோ பொங்கல்
பொங்கும் எங்கும் பொங்கல்
பொங்கலோ பொங்கல்
பொங்கும் எங்கும் பொங்கல்

புத்தாண்டுப் பொங்கல்
புத்தரிசிப் பொங்கல்
ஊர் எங்கும் பொங்கல்
உலகம் போற்றும் பொங்கல்
ஏர் பிடிக்கும் உழவனுக்கு
ஏற்றம் தரும் பொங்கல்
பொங்கலோ பொங்கல்
பொங்கும் எங்கும் பொங்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்கரைப் பொங்கல்
சத்தான பொங்கல்
இனிமையான பொங்கல்
இன்னமுதப் பொங்கல்
அகல்விளக்கு ஏற்றி
ஆனந்தம் பாடி நின்று
அகமகிழ்ந்து கொண்டாடும்
ஆனந்தப் பொங்கல்
பொங்கலோ பொங்கல்
பொங்கும் எங்கும் பொங்கல்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கி எழு தமிழினமே!

ஐயகோ! எங்கள் அவலக்குரல் கேளீரோ!
அடுக்கடுக்காய் அவலம் தமிழருக்கு
அநியாய சேதங்கள் அவனியிலே நிலைக்குது
புனர்வாழ்வு தருவதான புனர்வாழ்வு நிலையத்தில்
பூட்டிய விலங்குடன் தமிழன் தானிருக்க
புகுந்தது காடையர் கூட்டம்
நிகழ்ந்தது கொலை வெறியாட்டம்
அப்பாவித் தமிழர்களைத் தப்பாது கொன்று
எக்காளம் விடும் சிங்களக் காடையரின்
சிறுமைத்தனத்தைச் சிதைத்து எறிய
பொங்கி எழு தமிழினமே!
பொறுத்தது போதும்!!

- பண்டாரவளை படுகொலை நினைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம்

**ப**ண்டைக்கால தமிழினம்
பாரெங்கும் வாழுது
போரல்லோ வந்துநின்று பார்
முழுக்க வாட்டியது
போரோய்வு வந்தது
பாரெங்கும் மகிழ்ந்தது
நோர்வேயின் சமாதானம்
நோக்கமாக விளையுது
பாலசிங்கமும் நோர்வேயும்
பகிரங்கமாய் பேசுது
மொரகொடவும் வந்தல்லவோ
பேச்சுவார்த்தை நடக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கமான பேச்சு
அரும்பிடவே வேண்டும்
அமைதி வாழ்வு என்றும்
அமைந்திடவே வேண்டும்
சமாதானம் எங்கும்
நிலைத்திடவே வேண்டும்
சரித்திரமாய் அதுவும்
பதியப்பட வேண்டும்
சமாதானம் எங்கும்
நிலைத்திடவே வேண்டும்
சரித்திரமாய் அதுவும்
பதியப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படு தமிழா!

**த**மிழீழமண் பறிக்கப்பட்டு
தமிழர் உரிமைகள் நசுக்கப்பட்டு
சிறுபான்மை இனமென ஒதுக்கப்பட்டு
சிங்களம் சட்டமென மாற்றப்பட்டு
தமிழீழ மண் வாரி எடுக்கப்பட்டு
அராஜகங்கள் அளவின்றித் திணிக்கப்பட்டு
அடிமை வாழ்வு புகுத்தப்பட்டு
சுதந்திர வாழ்வு சுருக்கப்பட்டு,
ஏதுமற்ற ஏதிலியாய் ....
ஏக்கமுடன் வாழும் மக்களின்
அவலநிலை அடியோடு ஒழிய
புறப்படு தமிழா . . . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுயுகம் படைப்போம்!
புறப்படு தமிழா . . . . .
புதுயுகம் படைப்போம்!!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - இந்தப்
பாரே உனக்குச் சொந்தமடா.

எட்டயபுரத்தில் உதித்த சிங்கம் நீயடா
எண்ணியே கருமமாற்றிய வீர மறவனடா

ஏழு வயதில் கவி பாடிய வள்ளல் நீயடா
ஏறு நடை பயின்ற பாவலன் நீயடா

பைந்தமிழைப் பாரினிலே வளர்த்தாயடா
பாலர் எமக்குப் பாப்பாப் பாட்டுத் தந்தாயடா

புதுக்கவிதை புனைந்த புலவன் நீயடா
புலம் பெயர் வாழ்விலும் புதுக்கவிதை பிறக்குதடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடி விளையாடு பாப்பா என்றிட்டாய் அன்று -
ஆனால்
ஓடி விளையாட வீட்டில் இன்று இடம்
இல்லையடா

அக்கரைக்கு இக்கரையென ஓடி வந்திட்டோம்
அநியாயம் அகதிவாழ்வு எமக்கு நியதியடா

மண்விடுதலை பெண்விடுதலை எனப் பாடினாய்
அன்று
ஆனால் மண்ணோ இன்னும் விடிவு
பெறவில்லையடா

குண்டடியும் செல்லடியும் எமைத் துரத்தி வந்ததடா
குழந்தைகளும் குடும்பமாய் அங்கே மாண்டாரடா

தேமதுரத் தமிழ் உலகெங்கும் ஒலிக்குதடா
தெவிட்டாமல் தமிழ் தேசமெங்கும் பரவுதடா

பார் முழுக்க போரோய பிரார்த்தனைகள்
ஊர் முழுக்கத் திரண்டல்லோ கேட்குதடா

பாட்டுக்கொரு புலவன் பாரதியடா - இதை
கேட்டு நீயும் உணர்வு கொள்ளடா

▪ ▪ ▪



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடியில் ஆனதென்ன ....?

**க**றுப்பு யூலையாய் கலக்கிய ஆடியே
கனத்த எம்மனங்களில் கருகிய நாட்களே
கூடி வாழ்ந்த தமிழர் கூட்டங்களைக்
குண்டு போட்டுக் குலைய வைத்தாயே
ஆடியில் ஆனதென்ன ....?
அமைதியாய் வாழ்ந்த உறவுகளை
அடித்த புயல்மாதிரி அழிய வைத்தாயே!
வெலிக்கடை காலி பலிக்கடாக்களாய்
வெட்டியே மக்களைக் கொன்று குவித்தாயே
கறுப்பு ஆடியே! மனங்களைக் கருக்கிய ஆடியே
அகதியாய் தமிழனை அலைய வைத்தாயே
அநியாயமாய் உயிர்களை அழித்தேயொழித்தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியைப் பறித்தாய் கரும்புலியை
உருவாக்கினாய்
பள்ளியை மூடினாய் பாலகரைப்
படுகொலையாக்கினாய்
சட்டங்களிட்டுச் சனங்களை சிறையிலடைத்தாய்
வட்டம் போட்டு வரலாற்றை மாற்றினாய்
ஆடியில் ஆனதென்ன .... !
அமைதியே போனதம்மா .....!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்ணியம் எதுவெனப் புரிந்திடவே வருவாயே!

புண்ணியம் எதுவெனப் புரிந்திடவே வருவாயே!
கண்ணியமாய் வாழ்ந்த மக்களைக் காத்திடவே
வருவாயே!
எண்ணிய எண்ணங்கள் யாவும் ஈடேற
அருள்வாயே!
பண்ணிய பாவம் என்ன? அகதியாய் நாம் வாழ
பட்டதுயர் யாவும் விட்டொழிய அருள்வாயே,
இட்ட பலன் இதுவென அழுகின்றார் ஈழமக்கள்
கிட்ட இந்த இராணுவம் நெருங்காமல்
கொட்டும் குண்டுகளாலும் கோர மழையாலும்
கொடுமைகள் இழைக்காமல் காத்தருள வருவாயே
சங்கடங்கள் புரிந்து சரித்திரம் படைக்கும்
வேலவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்காரம் புரிந்து சண்டாளர்களை அழிப்பாயா!
சட்டி விரதம் என்று பட்டி தொட்டி எல்லாம்
சனங்கள் உன் சந்நிதியை நாடி வர
எங்கள் இனம் அழியாமல் காப்பாயா?
வேல் எடுத்து போர் புரிந்த வேலவா!
பார் எங்கும் போர் முழக்கம் சூளுதையா
ஏர் உழுது பார் எங்கும் வாழ்ந்த மக்கள்
போர் புரிந்து பொழுதுகளை வீணாக்கலாமா?
ஊர் எங்கும் செல்களால் ஊனமுற்றோர்
அவதிப்பட
நீர் கூட அருந்தாமல் நிர்க்கதியாய்க் கிடைக்கையில்
தோள் கொடுத்து உதவிடவே தேவரீரே! வருவீரே!
வாடிக்கிடக்கும் நாதியில்லா மக்களுக்குத்
தேடி நீயும் வந்து புண்ணியம் புரிந்திட்டால்
ஓடி ஓடி வருவார்கள் வேலவா உன் சந்நிதிக்கு.
பாடி வீடமைத்து பழந்தமிழ் புரிந்த கந்தனே!
பயம் எதுவும் இல்லாமல் வாழ்ந்திடவே
அருள்வாயே
அருள்வாயே! அருள்வாயே! கந்தனே அருள்வாயே!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவராக வாழ்ந்திடுவோம்

மனிதர்களாக நாம் வாழ்ந்திடுவோம்
மாண்புடன் உலகை ஆண்டிடுவோம்
சிறுவர் நாங்கள் சேர்ந்திடுவோம்
சிரித்துப் பேசி மகிழ்ந்திடுவோம்
அம்மை அப்பரை வணங்கிடுவோம்
அனுதினம் அவர்களைப் போற்றிடுவோம்
நல்லவராக வாழ்ந்திடுவோம்.

நாட்டிற்குப் பெருமை சேர்த்திடுவோம்
தமிழைப் பேசி மகிழ்ந்திடுவோம்
தரணியில் அதன் புகழ் நாட்டிடுவோம்
பாடல்கள் பாடி மகிழ்ந்திடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடல்கள் ஆடிக் களித்திடுவோம்
ஒற்றுமை எங்கும் வளர்த்திடுவோம்
வேற்றுமை யாவும் விலக்கிடுவோம்
அன்புடன் பேசி மகிழ்ந்திடுவோம்
பண்புடன் வாழப் பழகிடுவோம்
நல்லவராக வாழ்ந்திடுவோம்
நாட்டிற்குப் பெருமை சேர்த்திடுவோம்!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியல் தான் பிறக்குமா....?

பருவகால மாற்றமும் கடந்து
பாதைத் திறப்பும் முடிந்து
யுத்த நிறுத்தமும் நிலைத்து
யுகமாய் நாட்கள் நகர்ந்து
பேச்சுவார்த்தை நடைபெற்றால் ...
விடிவுதான் எமக்கு கிடைக்குமா?
விடியல்தான் பிறக்குமா? ....

விடிவு எமக்கு கிடைத்தால் ...
விளைநிலங்கள் துளிர்விடும்
பட்டினிச்சாவு மறையும்
பஞ்சம் யாவும் பறந்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலஞ்சம் இல்லாது ஒழியும்
அமைதி வாழ்வு மலரும்
அடிமை வாழ்வு அகலும்
அன்னை பூமி செழிக்கும்
அதனால் மலரும் சுதந்திரவாழ்வு
நல்ல விடிவுதான் எமக்கு கிடைக்குமா?
விடியல்தான் பிறக்குமா? ....

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியனே!

**வ**ரலாறுகள் பல கண்ட வன்னி மண்ணை
வளமாக ஆண்ட பண்டைய தமிழ் வீரன்
மண்டியிடாத மாமன்னர் பரம்பரையில்
மங்காத ஒளி விளக்காக உதித்த
மாணிக்கத்திலகமே! பண்டாரவன்னியன்
மக்கள் தலை நிமிர்ந்து தரணியிலே சிறக்க
வெள்ளையரை எதிர்த்து வெஞ்சமர் புரிந்து
வெற்றிக் கொடி நாட்டிய மாமன்னன்
'வீட்டுக்கொரு வீரர் நாட்டைக் காக்க
வந்திட்டால் வெள்ளையர் எம்மை
அணுகவும் நேருமா?' என ஓங்கிக் குரல்
கொடுத்த ஓயாத தமிழ்த் தாய் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி மக்கள் வாளெடுத்துப் போர் புரிந்தால்
வந்த அன்னியரை விரட்டலாம் என
வீறாப்புடன் முழங்கியவன் ...
தங்கத் தமிழ் பரம்பரையின் மங்காத
தமிழ் சொத்தே பண்டாரவன்னியன்
அன்றும் என்றும் எம் மண்ணில் நின்று
அன்னியருக்கு அடிபணியாது ...
வெள்ளையனை எதிர்த்து போரிட்டு
சாகாவரம் பெற்ற சரித்திர வீரனே
போற்றுகிறோம் உன்னையே.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழம் எங்கள் தாயகம்

தமிழீழம் எங்கள் தாயகம்
தாயென அதனைப் போற்றிடுவோம்
தங்கத் தமிழை வளர்த்திடுவோம்
சொந்த நாடு என்றிடுவோம்
சொந்தங் களோடு வாழ்ந்திடுவோம்
புலிகள் வளர்த்த தாயகம்
புதுயுகம் படைத்திடும் தமிழீழம்
பண்டைய அரசர் வாழ்ந்தவிடம்
பலகலை கொண்டது தாயகம்
பெரியோர் பலரைப் பெருமையாக்கி
பெயரும் புகழும் அளித்தஇடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழீழம் எங்கள் தாயகம்
தங்கத் தமிழைப் பேசுமிடம்
புகழும் பெருமையும் சேர்த்தவிடம்
புண்ணியம் ஆனது எங்களிடம்
விளையும் நற்பயிர்கள் கொண்டவிடம்
வளம்பல கொண்டது தாயகம்
வாழ்வு அளிப்பது தமிழீழம்
தமிழீழம் எங்கள் தாயகம்
தரணியில் அதனைப் போற்றிடுவோம்
பெருமை சொல்லும் தாய்நாட்டைப்
பேணி நாமும் காத்திடுவோம்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ மாமனிதர்களே!

ஓ மாமனிதர்களே! மரணித்த மாவீரர்களே!
வீரத்தின் விளைநிலங்களே! காலத்தின் கனிகளே!
மானத்தின் பிறப்பிடங்களே!
இலட்சியத்தின் இருப்பிடங்களே!
எண்ணிலா ஆசைகளை எண்ணத்தில் இருத்தி,
நிலையில்லா வாழ்விற்காய் நிம்மதியைத்
தொலைத்து
தாய்மண் காப்பதே தன்னிகரல்லாச் சேவையென
நேருக்கு நேர் போர் புரிந்து,
வெற்றியை நிலைநாட்டும் சத்தியவான்களே!
கார்த்திகை 27 இல் கார்முகில் கூடக் கறுக்குமே!
காரிகைகள் தீபமேற்றி காணிக்கை ஆக்குகிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவீரர்களே! மரணிக்கவில்லை நீங்கள்
உடல் மண்ணுக்கும் உயிர் விண்ணுக்கும்
உரமிட்டு, விடுதலை தீபங்களாய்
விளைநிலங்கள் எல்லாம் வியாபிக்கிறீர்கள்!
மாவீரர்களே! மங்காத ஒளிப் பிழம்புகளே!
போற்றுகிறோம் உங்களையே!

▣ ▣ ▣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர விடுதலை நோக்கி.....

சுதந்திரத்தின் சுகத்தை
நுகரத் துடிக்கும் எம்மக்கள்
சுதந்திரமாய் விடுதலை பெற
ஏன் இந்த தாமதம் .... ?

வளம் பெறும் எம்மக்கள்
வறள் நிலத் தாவரங்களாய்
வாடி, வதங்கி ....
விடுதலைக்காய் ஏங்குகின்றனர்.
எத்தனை ஏக்கங்கள்
எத்தனை தவிப்புகள்
எத்தனை இழப்புகள்
அத்தனையும் எம்மை விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகலுமா ... ?
ஆதங்கம் மனதினிலே

நாற்புறமும் நம்மண்ணை
நாட்கள் நாட்களாக
நரிகள் போல் இராணுவம்
வட்டமிடும்போது....

நாடு இல்லாமல் நாம் போவதா?
நாளும் பொழுதும் நாம் காத்த
நம் மண் எங்கே ....?
நாட்களே பதில் கூற மாட்டீர்களா...?

வட்டமிடும் வானவூர்திகளும்
வகை வகையாக செல்களும்
வண்டமிழர் மண்ணில்
வரலாறு படைத்து விட்டது.

அடுக்களை அன்னையரும்
அடுக்கடுக்காய் இளைஞரும்
ஆயுதம் எடுத்து,
விடுதலை தேடும்போது
அப்பாவிகள் போல் நாம்
இங்கிருப்பதா....?

சிந்தித்தீர்களா! தமிழினமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்காதே தமிழினமே
தூரத்து விடியல்
துலங்கும் வரை
தூங்காதே தமிழினமே!
படுகுழி புதைகுழி நிரம்பிப்போச்சு
படுகொலை தினமும் நிதகொலையாச்சு
பாலகர் பரிதவிப்பு படுபாதகமாச்சு
பட்டினி பாரினில் அதிகரிச்சுப்போச்சு

இத்தனையும் நடைபெற
இனியும் நாம் பொறுப்பதா....?

கிளர்ந்து எழு தமிழினமே
சாவு ஒரு முறை வாழ்வு பலமுறை
வீறு கொண்ட தமிழனின்
வேகம் ஓயாது ......

தமிழன் விடிவு பெற
சிந்திய உடல்கள் எத்தனை?
சிதையாத உடல்கள் ...
சிந்திய இரத்த ஆறு ....
நாளை என்று எண்ணாது
இன்றே புறப்படுவோம்
சுதந்திர விடுதலை நோக்கி ....
11.04.2001



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ச்சொல்லில் வீரரடி!

**வா**ய்ச்சொல்லில் வீரரடி என்றிட்ட காலமும்
மறைந்து
வடிவான பெண்கள் என்றிட்ட காலமும் போய்
வளமான உலகில் வலம் வரும் பெண்களைப் பார்
நிலையாக பல தொழில்களில் நிலைப்பதைப் பார்!

எங்கும் பெண்கள் எதிலும் பெண்கள்
இருப்பதையும்
பொங்கும் கடலலைபோல் நல்லெண்ணங்கள்
சிறப்பதையும்
பட்டங்கள் சட்டங்கள் பாரினிலே பெண்கள்
புரிவதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளி போல் பார்முழுக்க பாடுபடுவதையும்
எண்ணியே பார்!

அடுக்களை அன்னையரும் அடுக்கடுக்காய்
பெண்களும்
ஆயுதம் எடுத்து விடுதலை பெறுவதைப் பார்!
ஆகா! பெண்களே! அவனியை ஆள்வதையும்
எண்ணியே பார்
வாய்ச்சொல்லில்தான் பெண் வீரரா?

புதல்வர்களை பெறுவதுதான் பெண்ணின்
நிலையென
தப்புக்கணக்கிட்டது போதும்
புலம்பெயர் வாழ்வியலில் கல்வியில் முதலிடம்
பெண்களே!
கணிதப் பொறியும் கணக்கிட்டுச் சொல்லுதே

புனிதப்பணியிலும் பெண்களே சிறப்பதைப் பார்!
பூக்கும் பூவிலும் பெண்பூவே பூத்துக்
குலுங்குவதைப் பார்!
சாதம் படைக்கவும் பாலியலுக்கும் பெண்தான்
என்ற நிலை மாறி
சரித்திரம் படைக்கவும் சாதனை புரியவும்
பெண்ணால் தான் முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனியில் ஆணுக்கு உதவுவதும் பெண்ணே!
ஆயிரம் வாழ்க்கையில் அகல் விளக்கேற்றுவதும்
பெண்ணே!
இத்தனையும் புரியும் பெண் வாய்ச்சொல்லில்
தான் வீரமா?

▣ ▣ ▣

*04.03.2002*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்கு மட்டும் ஏன் இப்படி.....

**கா**ர் கால குளிர் உடலை வாட்ட
கருங்கூந்தல் காற்றிலே ஆட
பார் எங்கும் பனித்துளிகள் பறக்க
பாய்ந்து பாய்ந்து பங்கருக்குள் சென்றதை
எண்ணி எண்ணி பார்க்கிறேன்
எனக்கு மட்டும் ஏன் இப்படி....
பத்துவருட முன் பாடசாலை செல்ல
பஸ்சிற்கு காத்திருக்கும் வேளை
புக்காரா வந்து வானத்தில் வட்டமிட
புதருக்குள் பதுங்கி குப்புறபடுக்க
பக்கென்று பக்கத்தில் குண்டும் வெடிக்க
படபடவென்று இதயமும் அடிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுநடுவென்று உடலும் நடுங்க
விறு விறு வென்று ஓடிய நாட்களையும்
விடைபெற்ற நடைபெற்ற காலங்களையும்
வீணாக்கிப் பார்க்கிறேன்.....
எனக்கு மட்டும் ஏன் இப்படி....
அம்மாவையும் அப்பாவையும் இடையிலே
தொலைத்து
ஆதரவு தேடி அலைந்த நாட்களையும்
ஆதிக்க வெறியுடன் சாதிக்க நினைத்த
நாட்களையும்
இந்தியப் படையுடன் இடர்பட்ட
சோக நினைவுகளையும் .......
எண்ணி எண்ணி பார்க்கிறேன்
எனக்கு மட்டும் ஏன் இப்படி .......

▣ ▣ ▣

*18.01.2001*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோக நினைவுகளை நினைவில் அமர்ந்தபடி....

**த**மிழீழ அகதி முகாமில்
முடங்கி நிதம் வதைபட்டுக்
திகிலுடன் வாழும் மக்கள்
நிலை கண்டு பரிதவித்தேன்

பசிக்கு உணவில்லை
புசிக்க காய்கறிகளில்லை
புரிந்து கொள்ள ஒருவரில்லை
புலம்பும் இதயம் கண்டேன்
தாய் இழந்து தந்தை இழந்து
வாடும் எம் உறவுகள்
வசந்தத்தை தேடும் நிலைகண்டு
வருந்தினேன் வருந்தினேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவை இழந்த உறவொன்று
அநாதையாய் வாழ்வதையறிந்து
அப்பா உதவாமல் தப்பாக செய்யும்
அநியாயம் கண்டேன் அவனியில்

என்நினைவில் சுமந்தவை ஏராளம்
எழுத்தில் வடிக்க எல்லாம் முடியவில்லை
சுகமான நினைவுகள் வரமறுத்தலால்
சோக நினைவுகளை சுமந்தே வந்தேன்.

*11.09.2001*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவின் உயிராக.....

**உ**றவின் உயிராக
உன்னைத் தேடுகிறேன் அம்மம்மா
உள்ளத்தில் எள்ளளவேனும்
கள்ளமற்று உயிராக காத்தாயே!

பாட்டும் நல்ல கதையும் சொல்லி
பாலன்னம் ஊட்டி வளர்த்தாயே!
கோவிலென்றால் கொண்டாட்டம் - உனக்கு
சொல்லவும் வேண்டுமா?
பிள்ளையார் தேர் என்றால்
பிள்ளை உனக்கு புதுவளையல் - என
வண்ண வண்ண வளையல்களை
எண்ணமுடன் வாங்கித் தருவாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மம்மா அம்மம்மா என
அன்புடன் அழைப்போமே!
இன்று நீ உண்ணாமல் உறங்காமல்
காலனவன் கைப்பிடியில் சென்றுவிட்டாயே!

உறவின் உயிராக உன்னைத் தேடுகிறேன்
உறவின் உயிராக உன்னைத் தேடுகிறேன்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேளாயோ உலகமே!.....

இந்துமா கடலின் இதயமான
இலங்கை எனும் தீவிலே.....
ஈனர்களின் இழி செயல்களை
கேளாயோ உலகமே!
அப்பாவி மக்களை அநியாயமாய்
அழிக்க எடுத்த அரசின் சதி!
அநியாய தமிழ் உயிர்கள் - அங்கே
சிறைக்குள் அடக்கம்
வதைப்புக்கள் அதிகம்
தீர்வு இன்றி தீந்தமிழ் வாட்டம்
ஊட்டம் இன்றி உண்ணா நோன்பால்
உயிர்களின் அடக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகையே உருக்கவில்லையா....?
உணவின்றி உதிர வாந்தி
உடைப்பெடுத்து வருகுது
உதவுவார் யார்....?
தீர்வும் முடிந்து போரும் ஓய்ந்து
போக வழிவிட்டும்.....
தடுப்பு என்று அடைப்பு செய்து
தமிழ் உயிர்களை வாட்டலா..?
மூச்சு முடியட்டுமென வாட்டும்
அரசின் கோரம் ஒழியுமா?
விடியும் சமாதானமே!
விடைதான் தாராயோ!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் எண்ணமெல்லாம் நீயாக!

என் எண்ணமெல்லாம் நீயாக
என் மனதில் நிறைந்தாயே!
ஏற்றமுடன் உன் வரவை
எதிர்பார்த்துக் காத்திருப்பேன்
லண்டன் ரைமே! என்று சொல்லி
இல்லம் எல்லாம் வருவாயே!

உன் வரவால் இல்லமெல்லாம்
உவகையுடன் ஆர்ப்பரிக்கும்
இல்லமெல்லாம் இன்பகரம்
உள்ளமெல்லாம் குதூகலம்
இல்லம் நோக்கி வருவாயே!
இன்சுவையே தருவாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ள அள்ள குறையாத
நல்ல பல நிகழ்ச்சிகளை
நாளும் நாளும் தருவாயே!
வாழும் எம் மக்களுக்காய்
உன் சுவையே தனிச்சுவை

என் சுவையோ ரசிப்பதுதான்
ஏற்றமுடன் பல் சுவைகள்
எடுத்து வந்து தருவாயே!
ஐரோப்பிய நிகழ்வுதனை
அருமையாக எடுத்துச் சொல்வாய்!

பல படையல் படைத்திடுவாய்
பாலருக்கும் உதவிடுவாய்
என் எண்ணமெல்லாம் நீயாக
என் மனதில் நிறைந்தாயே!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நசுக்கிட நசுங்கிடா பேனா முனை!

**உ**ணர்வின் உறைவிடமாய்
உறுதியின் ஊன்றுகோலாய்
உள் மனதுக் கோலங்களில்
உண்டாக்கிய வடுக்களை
உள்ளபடி உள்ளத்தில் உரைக்கும்
ஊற்றுப் போன்ற எண்ணங்களை
ஆற்றுப்படுத்த முடியாமல்
எழுத்துருவில் வடித்து
கருத்துக்களை கக்கும் என் பேனா
நசிக்கிட நசிக்கிட
நசிங்கிடா பேனாவே!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமையுடன் வாழ்!

**மே**னி நிறை நகையிட்டால்
பேணும் என்னழகென
பூணாதே பெண்ணே!
புன்னகை அணிந்து
பெண்மகளாக....
பெருமையுடன் வாழ்
உரிமைகள் பல பெறுவாய்
உலகத்தில் என்றும்

▣ ▣ ▣

# தீ பந்தத்தால் வளருமா? பாசம்

**ஆ**தியும் அந்தமும் இல்லா
அரும் பெரும் சோதியான
இறைவனின் பந்தத்தை
இறுகப்பிடி.........
இதமான அருள் எப்போதும்
கிடைக்கும்

பந்தம் பாச பந்தம்
அந்தம் இல்லா வாழ்வாய்
அந்தரத்தில் உலாவுது
அகதியாய் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையில் இருக்கும்
பாசத்தாயை பரிவுடன்
அணைக்காமல், இறந்தபின்
இறுதியில் பந்தம் பந்தமாய்
பிடிக்கும் தீ பந்தத்தால்.....
வளருமா? பாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும் வேண்டும்

**வே**ண்டும் வேண்டும் இறைவா!
இன்பத் தமிழ் கற்க வேண்டும்
இனிமையாகப் பழக வேண்டும்
இணையில்லா இன்பத்தை எல்லோர்க்கும்
அளிக்க வேண்டும் இறைவா!

வேண்டும் வேண்டும் இறைவா!
உனை என்றும் வணங்க வேண்டும்
உலக மக்கள் நலமாக வேண்டும்
உள்ளூர சமாதானம் மலர வேண்டும்
உள்ளமும் மகிழ்வாய் பூரிக்க வேண்டும்
வேண்டும் இறைவா வேண்டும்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னத ரம்ழானே!

மறையோனே! மங்கலப் பெருமகனே!
உள்ளத்தில் தூய்மையை காக்கும்
உன்னத புனித ரம்ழான்!
முப்பது நாட்கள் உணவை ஒறுத்து
முன்செய்த பாவங்களை களைந்து
உள்ளத்தில் ஒளியும் உன்னத இறைவனின் ஆசியும்
எம்மிடம் வந்து இணைய வேண்டுமே!
புனித ரம்ழானே! நபிகள் நாயகமே!
புலம்பெயர் வாழ்வின் அவலங்கள் அகன்று
மறை இல்லா வாழ்வு மலர்ந்து
அனைத்து உறவுகளும் இணைந்து
அகத்தில் அன்பும் அணைப்பில்
கைகளும் இணைந்து
ரம்ழான் நாளில் ரம்மியமான வாழ்த்துக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுகின்ற காலையே!

எழுகின்ற காலையே! மகிழ்கின்ற நேரமே!
விடிகின்ற பொழுதாய் விரைந்து வா ....
உதிக்கின்ற சூரியன் உதயத்துக் கதிர்களை
விரிக்கின்ற நேரமாய் விரைந்திடுமே!

சூரிய ஒளியது விளங்குமே எப்போதும்
நாடிய பயிர்கள் தேடியே ஒளியே
கூடியே பெற்றிடுமே குடும்பமாய் வாழவே!

வெண்பனிக் காலை வெளுக்கின்ற பொழுதாய்
முன்பனி வந்து முட்டியே நிற்குமே!
பின்வரும் கதிரவன் முன்பனி அகற்றி
முற்பகல் தன்னைப் பூமிக்கு காட்டிடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை செயல்கள் எழுகின்ற காலையில்
நிகழ்கின்ற நேரமாய் நிலைத்திடுமே பூமியில்
காலைச்சூரியன் கலகலப்பாய் வந்திடுமே!
நாளும் எமக்கு நற்செயல் புரிந்திடுமே!

இலையுதிர் காலம் இனிமைகளற்ற காலம்
மழையும் காற்றும் மனதை மாற்றிடுமே!
புயலும் மழையும் பூமியை நிறைக்க
குளிரும் பனியுமாய் கொடுமைகள் கூட
வீட்டுக்குள் அடக்கமாய் உறக்கமும் இங்கே!...
எங்கே சூரியனே!... எழுகின்ற காலையில்
விடிகின்ற பொழுதாய் விரைந்து வா எம்மிடம்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருக வருக புத்தாண்டே!

வருக வருக புத்தாண்டே!
தருக தருக நற்செய்திகள்
காலங்கள் நேரங்கள்
கழிந்த ஆண்டுகள் யாவும்
விடைபெற்று......
புதிய ஆண்டில் புதுமைகள் மலர
வருக வருக புத்தாண்டே
தருக தருக நன்மைகள் பல
தீய எண்ணங்கள் அகன்று
நல்ல எண்ணங்கள் நாளும் மலர
வருக வருக புத்தாண்டே!
தருக தருக நற்சுகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லாத காலங்கள்
பொடிப்பொடியாகி .....
இல்லாத பொய்மைகள்
நில்லாது ஒளிய
வெல்லாத வேடங்கள்
வேரோடு களைய
வருக வருக புத்தாண்டே
தருக தருக நற்சுகங்கள்
வருக வருக இலண்டன் ரைமே
தருக தருக நல் ஆக்கங்கள்
பெருக பெருக பெருமைகள்
வளர்க வளர்க நற்புகழ்
வருக வருக புத்தாண்டே!
தருக தருக புதுமைகள்
எழுக எழுக தமிழினமே!
எழுக எழுக தமிழினமே!
ஏக்கங்கள் கலைய ...
தூக்கங்கள் மறைய
புதுமைகள் மலர
விடுதலை உரமாகிட
எழுக எழுக தமிழினமே!
ஏற்றமுடன் எழுக!
நாளைய விடுதலை நோக்கி....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக வருக புத்தாண்டே!
தருக தருக நற்செய்திகள்
இனிய புத்தாண்டாய்
எப்போதும் வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதித் தையாய் வாராயோ?

**தை**மகளே! வாராயோ!
தமிழர் வாழ்வில் ஒளி ஊட்டாயோ!
சிவந்த கதிர்களை திசையெங்கும் பரப்பி
இருள் நீங்கி ஒளி தரும்
சூரிய பகவானோடு
தை மகளும் இணைந்து
தரணிக்கு சேதி சொல்ல
தை மகளே! வந்து விட்டாய்!

புதுப்பானை அடுப்பிலேற்றி
புத்தரிசிப் பொங்கலிட்டு
மத்தாப்பு கொழுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ந்திருந்த பொங்கல்
விடை பெற்றுப் போனதே!

சட்டியை எடுத்து மின்னடுப்பில் வைத்து
சங்கதிகள் சொல்லாத பொங்கலதைப் பொங்கி
வீட்டுக்குள் படைத்து விடியலைத் தேடுகிறோம்
வெற்றி நமக்கென வேரும் பெற்று நிற்க
சுற்றும் புறமும் சுதந்திர அமைதி பெற

தித்திக்கும் பொங்கலாய் திசை எங்கும்
பொங்கட்டும்!
எத்திசையும் பொங்கட்டும் எல்லோரும்
பொங்கட்டும்!
பொங்கலோ பொங்கலென பொங்கி மனம்
படைப்போம்!

# யாருக்கு மேதினம்

**பா**டுபட்டுழைத்து பாருக்கு உதவிடும்
பாட்டாளிக்கு வேண்டும் மேதினம்
நாளும் பொழுதும் மாடாய் உழைத்து
ஓடாய் தேய்ந்து நாட்டுக்கு உதவிடும்
உழவனுக்கு வேண்டும் மேதினம்

நிலத்திலே பயிர் வளர நித்தமும்
நித்திரை இன்றி உழைக்கும்
பாட்டாளிக்கு வேண்டும் மேதினம்
அடுப்படி வேலையும் எடுபிடி வேலையும்
அன்னையருக்கே ஆனதென
அடிமைப்படுத்தும் வாழ்வு ஒழிய
அன்னையருக்கு வேண்டும் மேதினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண் விடுதலைக்கே மானிட வாழ்க்கை
அர்ப்பணித்த மறத் தியாகிகளுக்கு
வேண்டும் மேதினம்
நிலத்தையும் புலத்தையும் நித்தமும்
எதிரியின் பிடியிலிருந்து காத்திடும்
வீரருக்கு வேண்டும் மேதினம்
வானையும் மீனையும் நம்பி
வயிற்றை வளர்க்கும் மீனவர்க்கு
வேண்டும் மேதினம்

ஈழம் விடுதலை பெற்று இங்கித வாழ்வு
அனைவருக்கும் கிடைக்க வேண்டும் மேதினம்
வேண்டும் மேதினம் வேண்டும் மேதினம்
நீண்டு உழைக்கும் உழைப்பாளிக்கு
வேண்டும் மேதினம் வேண்டும் மேதினம்

05.05.2004



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி நீ ஒரு சாரதி

**பா**ட்டுக்கொரு புலவன் பாரதியடா !
இந்தப் பாரே உனக்கு சொந்தமடா
எட்டயபுரத்தில் உதித்த சிங்கம் நீயடா !
எண்ணியே தமிழை வளர்த்த உத்தமன் நீயடா !

பாரதியே நீ ஓர் சாரதி எமக்கு
பைந்தமிழை வளர்க்க வந்த பாவலனே !
பாப்பா பாட்டு தந்து தமிழ் வளர்த்தாயே !
தேன் மதுரத் தமிழை தேசமெங்கும் பரவ வழி
செய்தாயே !
பாட்டுக்கு அடி எடுக்க வைத்த பாவலா !
பைந்தமிழ் இன்று வானுயர வளருதையா !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கு இது தேவையடா நம்தமிழ்
கேட்டு நீயும் படித்திடடா நம் தமிழை
திக்கெட்டும் பரவுது எங்கள் தேசத்தமிழ்
திசை எங்கும் வளருது எங்கள் கன்னித்தமிழ்!

புலம்பெயர் நாட்டில் புதுத்தமிழ் வளருது
நிலம்தனை மறவாமல் நித்தலும் ஒலிக்குது
வானலைகளில் வளருது வண்ணத்தமிழ்
வானுயர வளருது எங்கள் செல்லத்தமிழ்
ஓயாமல் ஒலிக்குது ரீங்கார தமிழ்
ஒய்யாரமாய் பாடுது எங்கள் கன்னித்தமிழ்

கணினி எங்கும் தமிழ் கலக்குது பாரீர்!
கவிதை எங்கும் தமிழ் பிறக்குது பாரீர்!
வண்ணத்தமிழ் எங்கும் வளருது பாரீர்!
வண்டமிழாய் எங்கும் மணக்குது பாரீர்!!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைய தலைமுறையே எழுந்து வா!

புதிய சமுதாயம் படைக்க வா!
புதிய தலைமுறையாய் புறப்படு!
புதுமைகள் பல செய்ய முற்படு!

தடைகளை படைகளை உடைத்திடு!
தக்கவோர் களத்திலே உன் வாழ்வைப் பதி!
அகதி என்ற வாழ்வு உனக்கில்லை
அந்த அநியாய வாழ்வில் உன்னை சிதையாதே!

உயர்கல்வி படித்து உலகிலே முன்னேறு!
உயர்ந்ததோர் வாழ்வை நிலத்திற்கு காட்டு!
கணினியிலே உன் தமிழை காவியமாக்கிடு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதிலே ஒரு மாண்புறு கணினியை உருவாக்கி
காட்டிடு!

புதிய தலைமுறையாய் எழுந்து வா!
புதுமைகள் பல படைக்க நிமிர்ந்து வா!
அகிலத்தின் மொழிகள் அனைத்தையும் கற்றிடு!
அன்னை மண்ணிற்கு அதனால் பெருமையும்
சேர்த்திடு!

இளைய தலைமுறையே இன்னும் ஏன் தயக்கம்
எதிரி எம் மண்ணில் எத்தனையாயிரம் உயிர்ப்பலி
எடுத்தான்
அத்தனை போரிலும் மடிந்தது எம் இனமே!
வெந்துபோன எம்மவர் வேதனை தீர்த்து
சொந்த மண்ணில் எமக்கோர் நாடமைக்க
இளைய சமுதாயமே! எழுந்து வா!
இனியும் என்ன தயக்கம்

கோடி கோடியாய் கொலை வெறியர்
குத்தினாலும்
ஓடி ஓடி எம்மினம் நாடுநாடாய்
வளர்கிறது நம் தமிழை
வெட்டி எறிந்து, வேட்டையாடிய உடல்களில்
ஊனங்கள் இன்னும் மாறவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயப்பட்ட உடல்களாய் இன்னமும் நாங்கள்
ஏன் இந்த அவலம்? ஏன் இந்த கொடுமை!

அகதியாய் தமிழன் அலைகின்றான்
எனப்பெருமை கொள்ளாதே!
புலம்பெயர் நாட்டிலும் தன்மானத்துடன்
புறப்பட்டோம்
இளமை உணர்வுகளை தமிழுடன் இணைக்கப்
புறப்பட்டோம்.
தமிழன் என்று சொல்லி தலைநிமிர்ந்து நிற்பாய்!

ஆக்க பிறந்த இனத்திற்கு தாக்கம் வரலாமா?
செந்தமிழையும் சைவத்தையும் சிறப்பாக்க
எம் தமிழராய் நாம் எழுந்துவிட்டோம் இங்கு!
வானலையாய் தமிழ் வலம் வருவதைப் பார்!
தேமதுர தமிழ் தேசமெங்கும் ஒலிப்பதைப் பார்!
தொலைக்காட்சியாய் தமிழ் பெருமை
பெறுவதைப் பார்!
கணினிக்குள் தமிழ் காவியமாய் மிளிர்வதைப் பார்!
இத்தனையும் எவ்வாறு எழுந்ததென்று
சிந்தித்தாயா?
தமிழன் என்று சொல்லி தலைநிமிர்ந்து நிற்பதால்!

காலம் எமக்கு வரலாறு காட்டுகிறது.
நேரம் எமக்கு சிந்தனையே தூண்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயை மொழியால் தாய் நிலத்தை உயிராய்
சேயும் வணங்குகின்ற சிந்தனை வளர்கிறது.
அகதி என்ற முகமூடியை நீக்கி ஆர்வமுடன்
எழுந்திடுங்கள்! எம் தமிழைக் காக்க!

முடியாத காரியம் எதுவுமில்லை
முனைப்புடன் எழுந்திடுங்கள்
திறமை காட்டிடுங்கள்
அன்னைத் தமிழை அழிவின்றிக் காப்போம்!
அகிலத்தில் தமிழனின் வீரத்தை விதைப்போம்!
புலிக்கொடி ஏற்றி புறநானூறு படைப்போம்!
புதிய தமிழனாய் மிடுக்குடன் எழுவோம்!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலரட்டும் புது நம்பிக்கை

கொட்டட்டும் போர்முரசு
கொளுத்தட்டும் பட்டாசுகள்
அதிரட்டும் தமிழீழம்
அடங்கட்டும் அவலங்கள்
மலரட்டும் சமாதானம்
மகிழட்டும் மக்கள் கூட்டம்
வாழட்டும் புதுவாழ்வு
வழங்கட்டும் வசதிகள்
நிலைக்கட்டும் நிம்மதிகள்
நீளட்டும் யுத்த நிறுத்தம்
புலரட்டும் புத்தாண்டு
பூக்கட்டும் புதுப்பூக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

●●●

பிறக்கட்டும் புதுநம்பிக்கை
விலகட்டும் விரோதங்கள்
ஒலிக்கட்டும் தமிழ்
ஓங்கட்டும் ஒற்றுமைகள்

புலரும் புத்தாண்டில்
மலரும் தமிழீழத்தில்
ஒற்றுமை கரம் பற்றி
ஓங்கி ஒலிப்போம்
புலரட்டும் புதுநம்பிக்கை
மலரட்டும் (இப்) புத்தாண்டில்
புலரட்டும் புதுநம்பிக்கை
மலரட்டும் புத்தாண்டில்

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலத்தின் இனமொழி
# இனத்தின் முகவரி

**பு**லத்தின் தமிழ்மொழி இனத்தின் முகவரி
நிலத்தில் வாழவே நிரந்தர தாகம்
தாய்மொழி இழந்தவன் தாயை இழந்தவன்
வாய்மொழி அற்ற வகையினை ஒத்தவன்
சேய்மொழி அறியாத புலம்பெயர் இனமா?
தேசமே தெரியாமல் வாழலும் ஆகுமா?
புலத்தின் அவலம் நிலத்தின் தாகம்
புலம்பெயர் வாழ்விலும் தேடியே ஓடுது
வாழும்போதே வண்ணமாய் தமிழை
சேயும் கற்றிட வழியது செய்வோம்
புலத்தின் தமிழ்மொழி இனத்தின் முகவரி
புரியாமல் விழிக்கும் மானிடா கேளீர் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தின் வாழ்வே நிம்மதி யாபேருக்கும்
நிலமதன் மொழியை நாளுமே பயில்வோம்
பெரியோர் சிறியோர் அனைவரும் திரண்டு
தாய்மொழி பேசி மகிழ்ந்திடுவோம்
புலத்தின் தமிழ்மொழி இனத்தின் முகவரி
புலம்பெயர் வாழ்விலும் ஒட்டுமா? எம்மொழி !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குள்ளும் வந்தது வசந்தம்

என் மனதிற்குள்ளும் பூரிப்பாய்
என்றும் நிலைத்திடும் நினைவது
பிரசவ வேதனைகளாய்
பிறந்தன என் மனத்திரையில்
நாளும் நடக்கும் அரும்புகள்
வாழ்க்கைப் போராட்டங்களை
நயமாக நாற்றுக்களாக
நாட்டினேன் புலத்தினிலே
புலத்திலே பூத்த பூவாக
புலர்ந்து நூலாக மாறியது
நூலாக அதுவும் உருமாறியே
வேராக மக்களைச் சென்றிட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாக அரங்கேற்றம் காணுகையில்
கிடைத்த விமர்சனங்கள்
எனக்குள்ளும் பூரிப்பாய்
புது வசந்தத்தை தந்தது
வசந்தமாய் வந்த அந்த நினைவலைகள்
சுகந்தத்தை தந்தன
எத்தனை படைப்புக்கள்
என் மனதில் எழுந்தாலும்
எனக்குள்ளும் அற்புதப் படைப்பாய்
அகமகிழ்வு தந்தது அன்னையின்
வளர்ப்பில் அரும்புகள் நூல்
பற்பல அறிஞர்களின் பொற்பல
கருத்துக்கள் வசந்தமாய்
என் மனதை நிறைத்தன
எனக்குள்ளும் வந்தது
வசந்தமாய் அந்த நினைவலைகள்
எனக்குள்ளும் வந்தது
வசந்தமாய் அந்த நினைவலைகள்

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்பாதி பெண்பாதி

**பா**திப்பின்றி நீ இருந்தால் . . . . .
பரமசிவனும் உன்னை காப்பார்
பாதி பாதி ஆண்பாதி பெண்பாதி
என்றால் . . . . .
குடும்ப வாழ்வும் குதூகலிக்கும்
அர்த்தநாரீஸ்வரனான ஆண்டவனும்
ஆண்பாதி பெண்பாதியென
அகில உலகை ஆள்கிறார்
ஆனால் நீயோ! பாதி பாதியென
பாதிப்பை அல்லவா? ஏற்படுத்துகிறாய்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின விடிவிற்காய் வந்துவிட்டாள்!

**சி**த்திரையாள் வந்து விட்டாள்
சிறப்புக்கள் பல தர வந்து விட்டாள்
முத்திரையாய் தேர்தலிலே தமிழினத்தின்
முதன்மை வாக்குக்கள் பெற்றிட்டு
சித்திரையாள் வந்து விட்டாள்
சிறப்புக்கள் பல தர வந்து விட்டாள்
பொங்கு தமிழுடன் பொங்கியே
தமிழின விடிவுக்காய் வந்து விட்டாள்
புலத்தில் பொங்கிய ஐ.நா.வை நோக்கிய
பொங்கு தமிழ் எழுச்சியிலே பதிணெண்ணாயிரம்
தமிழின எழுச்சியுடன் பொங்கியே வந்திட்டாள்
எங்கும் தமிழ்மணமாய் பொங்கும் எண்ணங்கள்
பொங்கின அன்று . . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை நாள் பட்ட துயர்
இனியும் நாம் படாமல்
சித்திரையாள் வந்து விட்டாள்
சிறப்புக்கள் பல தர வந்து விட்டாள்
போரோடு வாழ்ந்த பொல்லாத சித்திரை
வேரோடு போக . . . . . . .
நாரோடு நறுமணம் கமிழும் நற்சித்திரையாள்
நாநிலத்தில் வாராயோ !!
வாராயோ! சித்திரையாள் !
தமிழருக்கு . . . . . .
நற்செய்தி தாராயோ! சித்திரையாள்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்திட்ட தைமகளே!

**வ**ளமான தமிழோடும் களமாடும் மரபோடும்
மலர்ந்திட்ட தைமகளே!
மறத்தமிழர் வாழ்வில் மணம் வீச வந்துவிட்டாய்!
தை பிறந்தால் வழி பிறக்கும் தமிழர் மரபு இது
தங்கத் தமிழுக்கு தனி ஒரு இருப்பிடம்
எங்கும் இருக்க எடுத்துவா தைமகளே!

புலர்ந்து வந்த தைமகளே! புதுமைகள் படைத்திடு
பூரிப்பு எம் தமிழர் வாழ்வில் புலரட்டும்
இதமான புதுராகம் இதயத்தில் வரட்டும்!
இடரான வாழ்வும் இல்லாது ஒளியட்டும்!
கலையும் கவிகளும் மண்ணிலே மலரட்டும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனமான சொற்களும் கழன்றே போகட்டும்!
சுகமான வாழ்வாய் சுகந்தங்கள் வீசட்டும்!
சூரிய வருகையால் மேன்மைகள் பெருகட்டும்!

புதியதோர் புத்தாண்டில் புதுமைகள்
படைக்கட்டும்!
பூட்டிய விலங்கும் பொடிப்பொடி ஆகட்டும்!
நாட்டிய கொடியுடன் நானிலம் ஆளட்டும்!
நம்தமிழர் வாழ்வும் நாற்றிசையும் பெருகட்டும்!

தேசத்தின் விடியலில் நேசத்தை காட்டுவோம்!
பாசத்தின் பரிவில் பண்புடன் வாழ்வோம்!
புதியதோர் சிறுவர் உலகம் வளரட்டும்!
புதுமைகள் செய்ய புலத்திற்கு செல்லட்டும்!
அமிழ்தினும் இனிய அன்னை மொழி பயிலட்டும்!
அதுவே எம்மொழியென உரக்க சொல்லட்டும்!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிமணி

**கா**ண்டாமணி ஓசைகேட்டு காலைத்தூக்கம்
கலைந்து ....
கடமைகளை தாங்கி ஓடினோம் தாயக வாழ்விலே
அலாரமணியுடன் அவசர விடியும் பொழுதாய்
விடை பெறுமே புலம்பெயர்ச்சூழல்
நிலமதன் நித்திய ஒலியே காதுகளில்
புலர்கின்ற பொழுதாய் பூத்திடுமே!

வெற்றி மணிகளாய் சுற்றியே கடமைகள்
பற்றியே படர்ந்த பாரினிலே
தாயக சூழலுடன் தரமான கல்வியும்
நயமான வாழ்வுமாய் நகர்ந்தன நாட்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிப்பாதையில் சுற்றியே கடமைகள்
சுழன்றன வெற்றிமணியாய் யாவும்
புலத்திலும் புலம்பெயர்விலும் எங்கள்
வெற்றிமணி

பூத்திடும் நல்லெண்ணங்களை காத்திரமாய்
காவி வந்து காதோரம் கதை சொல்லும்
கண்ணாவின் ஆக்கத்தில் கண்கவர் வண்ணத்தில்
கலர் கலராக காட்சியும் தந்திடுமே!
வெற்றிமணி சுற்றி சுற்றி பற்றியே தமிழை
வளர்க்குது பாரிலே பாரும்!

குப்பையிலே குண்டுமணி கிடந்தாலும் குன்றாது
அதன் நிறம் எங்கள் கொள்கையிலும்
வெற்றிமணி மாறாது அதன் தரம்!
குற்றிய நெல்மணியுடன் கூழுமே காய்ச்சி
கூடுபோல் வாழ்ந்தோம் குருவிகளாய் நாம்
வண்டுபோல் வாழ்ந்த இனத்தை குண்டு இட்டே
குலைத்தனர் சிங்கள காடையர்
ஆண்ட பரம்பரையை ஆளவிடாமல்
தடுக்கலாமா?
சிங்கள காடையரின் சிரங்கெட்ட வருகை
எங்களின் இனத்தை அழிப்பதா?

முனைப்புடன் எழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறு கொண்ட புயலாக எழுந்தனர் எம்மக்கள்
குட்ட குட்ட தமிழன் குனிவானா?
வெட்ட வெட்ட எம்மினம் வேரோடு சாயுமா?
பட்டப் பகலிலும் கொட்டும் வெயிலிலும்
மட்டமாய் சாவுமணி மனதை தொட்டாலும்
தொடர்ந்திட்ட போரிலே நடந்திட்ட எம்பயணம்
நாளைய வெற்றிமணியை பெற்றுத்தான்
ஆவோம்!

வெற்றிமணிகளாய் வெல்லட்டும் எம்மினம்
கொட்டு முரசாய் வெற்றிகளை குவிக்கட்டும்!
வெற்றியை நாளை சரித்திரம் சொல்லும்
வேருக்கு இது ஒரு தார்மீகம்
வெற்றியின் மணியை ஊரே சொல்லும்
வெற்றியை நிச்சயம் தரும் வீரம்

வெற்றித் தமிழாக எங்கள் தமிழ் உலகில் வலம்
வருவதைப் பார்!
வானலையில் தமிழ் வண்ணமாய் வருவதை பார்!
தேன் மதுரத் தமிழ் தேசமெங்கும் ஒலிப்பதை பார்!
தொலைக்காட்சியாய் தமிழ் பெருமை
பெறுவதைப் பார்!
இத்தனையிலும் வெற்றித் தமிழ் வெற்றிமணியாக
ஒலிப்பதைப் பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிமணி கட்டியிருக்கும் வெற்றித்தமிழ்
கூட்டமிது ! வெற்றியுடன் . . . . .
எம்தமிழராய் ஒன்றுபட எழுந்திட்ட தருணம் இது
வெற்றிக்கொடி கட்டி எழுந்திடுவோம்!
வெற்றித் தமிழ்ப் பெருமையை நாட்டிடுவோம்!
ஈழத்தமிழினமாய் இணைந்து செயற்படுவோம்!
வீரத்தமிழ் மணிகளாய் விரைந்து
பணியாற்றுவோம்!

நாடுநாடாய் நாம் சென்றிட்டு வளர்த்த தமிழ்
நாளைய உலகிற்கு நன்சான்று பகிரட்டும்!
விழித்தெழு தமிழினமே !
மாவீரமணிகளாய் மாண்ட தமிழினத்தை
எண்ணிப்பார் !
கூறுபோட்டு பிரிக்க எழுந்திட்டான் எதிரி
வீறு கொண்டு எழுந்திடுங்கள்!
விரைந்து எம் மண்காக்க புறப்படுங்கள்!

சமாதான சங்கொலிகள் ஒலிக்க வேண்டும்!
சத்தமின்றி அமைதி நிலவ ஒலிக்க வேண்டும்!
யுத்தமற்ற பூமியாய் விளங்கிடட்டும் தமிழீழம்!
நித்தமதை பெற்றிட விரைந்திடுவோம்
நாளையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி மணிகளாய் சமாதானம் கிடைக்கட்டும்!
வெஞ்சமரில்லா வாழ்வு நித்தியம் நிலைக்கட்டும்!
வெற்றி மணியாக எங்கள் தமிழ் ஒலிக்கட்டும்!
பற்றியே அதை வளர்ப்போம் புலம்பெயர்விலே

வெற்றிமணிகளாய் வீற்றிருக்கும் சான்றோர்களே!
என்கவியும் வெற்றியுடன் நிறைவுசெய்து
100 வது இதழ் காணும் வெற்றிமணிக்கு நன்றி கூறி
பற்றியே உங்கள் கரம் பணிந்து
பண்புடனே விடை பெறுகின்றேன்.

*(வெற்றிமணி விழா கவிதை)*

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாம்பலிலே உதிக்கும் அறிவுக்கதிர்

முற்றவெளி முன்றலிலே முத்தாப்பாய் எழுந்தது
கொத்தான எங்கள் கல்வியகம்
வித்தாக கல்வியை விதைத்து அனைவருக்கும்
சத்தாக தமிழருக்கு சங்கதிகள் சொல்லியது

கலைமகள் வீணையுடன் கம்பீர காட்சியகம்
கண்ணூறு பட்டமாதிரி கதையும் முடிந்ததே
முனியப்பர் அருகினில் முற்றாகப் பார்க்கவே
முனைப்புடன் காடையர் மூட்டினர் தீயையே
தீயினால் எரிந்து சிதறுண்டது தமிழனின் சொத்து
நள்ளிரவு நேரம் நாசமாகியது நம் தமிழர் வித்து

கோட்டையிலே சிரிப்புடன் சிங்கள காடையர்
எரியும் தீயை அணைக்க ஒருவரில்லை அப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

80,000 நூல்கள் எரிந்து காற்றில் பறந்தன.
கல்விக்கு வித்தான கலைமகள் கலையகம்
கண்களை இழந்து காவியமானது

சாம்பலில் உதிக்கும் அடுத்த அறிவுக்கதிர்
சக்தியின்றி உயருது இப்போ
சரித்திரம் படைத்த எங்கள் அறிவுக்கதிரை
சகலரும் சேர்ந்து உயர்த்துவோம் உயர
உரமான நூல்களை கொடுத்துதவி
வானுயர வளர்ப்போம் அனைவரும் சேர்ந்து
தமிழனின் கல்வியை தழைத்திட செய்வோம்
தமிழரின் உயர்வை தரணிக்கு காட்டுவோம்.

(யாழ் நூலக எரிப்பு நாள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் தீர்வில் தடையா...?

**த**மிழர் வாழ்வில் தடைதடையாய் தடைக்கற்களா?
தமிழுக்கு போடப்பட்ட முட்டுக்கட்டைகளா?
ஆட்சி மாறும் கட்சிகளால் அநர்த்தங்கள்
அப்பப்பா போதும் போதும் தமிழன் தாங்கிய
தடைகள்

பேச்சுவார்த்தையென ஆசை வார்த்தை கூறி
மூச்சில்லா பேச்சாய் இப்பொ முனங்குது பேச்சு!
ஓடி ஓடி ரணில் ஐயா ஓதியது தான் ஏது?
ஒளித்து ஒளித்து தமிழனை ஓரம் கட்டத்தானோ?

பேச்சுவார்த்தை இனி இல்லையாம் . . . . .
பேரம் பேச முடியாதாம் . . . . .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் நிறுத்த உடன்படிக்கை ரத்தாகிப் போகுதாம்!
போருக்கல்லவோ ஆயத்தம் நடக்குதாம்!

கீச்சு மாச்சு விளையாட்டாம் கிறுக்கல் பேச்சாம்!
போச்சு எங்கள் பேச்சுவார்த்தை
போட்டு உடைச்சாச்சாம் . . . . .

உலக நாட்டை ஏமாற்ற முடிச்சுப் போட்ட சந்திரிகா
உளறுகிறாவாம் இப்போ... ஆட்சியை தக்க வைக்க
தமிழனின் தலைவிதி போராட்டமா?
தம்பிரானே! தக்கவிடை பகராயோ?
தை பிறந்தால் வழி பிறக்கும் என்றெண்ணினோம்
ஆனால் . . . . . தடைகள் வந்ததே!
புத்தாண்டும் வந்தால் புதுயுகம் பிறக்கும்
சமாதானம் வந்தது படைகள் வந்தது
வந்தது வந்தது தடைகள் வந்தது . . . . .

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்காத விழிகள் இவர்கள் எம் மாவீர மணிகள்

உறங்காத விழிகளே! உயிர்த்தியாக உள்ளங்களே!
கலங்காத உறவுகளே! களப்பலி வீரர்களே!
நீங்காத நினைவுகளாய் நித்தமும் எம்முடன்
பாங்காக பழகியே! பண்புடனே! வாழ்ந்தீர்களே!

சிங்கள இராணுவத்தின் சிரங்கெட்ட செயலால்
சிறுத்தைகளாய் ஆனீர்களே! மண்ணை
மீட்டீர்களே!
தங்க தமிழீழத்தின் வீர உறவுகளே!
எதிரி எம்மண்ணில் குருதியாறு கொப்பளிக்க
வைத்தானே!
சடுதியாய் மண்ணை சல்லடைபோட்டுக்
காத்தீர்களே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதியும் இல்லாமல் வீர வேங்கைகளாய்
நடுநிசியிலும் நம்மண்ணைக் காத்தீர்களே!

மாவீரமணிகளே! மங்காத வைரங்களே!
நீங்காது உங்கள் தியாகம் நினைவலைகளாய்
எம்முடன்....

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாயிரத்தில் ஈழம்

இரண்டாயிரத்தில் ஈழமே இதமாக வாராயோ?
இடர்பட்ட மக்களின் வாழ்வு நிலைக்க
இராணுவ வெறியர்களின் இனவாதம் ஒழிய
அகதி வாழ்வின் அத்தியாயம் அடியோடு ஒழிய

வன்னி மக்கள் வாழ்வில் வசந்தங்கள் மலர
வரட்டு இராணுவ முரட்டுப் பிடியிலிருந்த மக்கள்
விலக
வனாந்தரங்களில் வாழ்ந்த காட்டு வாழ்வு கலைய
தொல்லைகள் அகன்று, கொடிய துன்பங்கள் நீங்கி
புத்தாயிரம் ஆண்டில் புதுவாழ்வு பெற்றிட
இரண்டாயிரம் ஆண்டே, தமிழீழம் தன்னை
இதயத்தில் சுமந்து வாராயோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதுவா? இதுவா?

**அ**ன்னை எம் பூமியின் ஆளப்பதிவுகள்
அன்னிய பூமியின் மீளப்பதிவுகளாய்
ஆறாத வடுக்களாய் ஊற்றெடுக்கின்றன
ஏழையாய் வாழ்ந்தாலும் எளிமையாய்
வாழ்ந்தோம்
சோலையாய் பூங்குயிலாய் சொந்தமுடன்
வாழ்ந்தோம்
வேரறுந்த பந்தங்களாய் வேற்று நாட்டில்
சோர்வுடனே வாழ்கிறோம் சோகங்களை சூடி
இங்கு
சொந்தமுடன் வாழ்ந்த சுகம் வந்த நாட்டில்
இல்லையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவா? இதுவா?
அலைபாயும் மனதில் அடிக்கடி வருவது
ஆழ்மனதில் எண்ணத்தை வெளிப்படுத்துவது
கூட்டுவாழ்க்கை குடும்ப வாழ்க்கை அங்கு
நாட்டு வாழ்க்கை நகர வாழ்க்கை இங்கு
நாசினல்ரி (Nationlity) கிடைத்து விட்டால்
சொர்க்கம் இது

சொல்லாமல் சொல்லும் சொந்தங்கள் பல
போரும் அவலமுமாய் அங்கு
வேரும் வெதும்பலுமாய் இங்கு
வேண்டாத வாழ்க்கையாய் தாண்டவம் இது
வேண்டும் அந்த தாயக வாழ்வு
மீண்டும் செல்கின்றனர் தாயகம் நோக்கி
அதுவா? இதுவா?
அலைபாயும் மனதில் இப்படி ஒரு கேள்வி

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாக திலீபனே!

**ஊ**ரெழு ஈன்றெடுத்த உத்தமனே!
உறுதியின் உறைவிடமாய் அமைந்தவனே!
உரக்கப் பேசியே தமிழ் உணர்வினை
ஊட்டினாயே!
ஆக்கிரமிக்க அமைதிப்படையின்
அநியாயத்தால் அழிந்தாயே!
பள்ளியை துறந்தாய்! படிப்பபைத் துறந்தாய்!
புள்ளிமான் போல் பாசறை புகுந்தாயே!
களம் பல வென்று வளம் பல மண்ணிற்கு
அளித்தாயே!
வெள்ளமான உன் தமிழ் உள்ளத்தை
வேரோடு பொசுக்கினரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரின் வீதியில் நம்மவர் பார்த்திருக்க
நீர் கூட அருந்தாத . . . . .
உன்னத தியாகம் புரிந்தாயே!
வீரம் செறிந்த உன் தியாகம்
விடியும் தமிழீழத்தை அணைத்தே செல்லட்டும்!
தியாக தீபமே! திலீபனே!
வீரமான உன் தியாகம்
வித்தாக மலரட்டும் தமிழீழ மண்ணில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமைகள் காவி வருக!

புத்தொழிர்வாயே புத்தாண்டே!
புத்தொழிர்வாயே புத்தாண்டே!
புதுமைகள் பல தர வருவாய் புத்தாண்டே!
இத்தனை நாள் காத்திருந்தோம் புத்தாண்டே!
இனிமைகள் பல தர வருவாய் புத்தாண்டே!
இடர்கள் பல பட்டோம் புத்தாண்டே!
இன்பம் பல தொலைத்தோம் புத்தாண்டே!
துன்பம் பல சுமந்தோம் புத்தாண்டே!
தூக்கம் பல இழந்தோம் புத்தாண்டே!
தாக்கம் பல பெற்றோம் புத்தாண்டே!
வாலறுந்த பட்டமாய் நூலறுந்து நிற்கிறோம்
நுண்மதி இருந்து நிம்மதி இன்றி வாழ்கிறோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை மனம் கொண்டு வேர் இன்றி
வாழ்கிறோம்!
வேற்றுமை களைந்து ஒற்றுமையாய் வாழ்ந்தோம்!

பற்றுக் கொண்டோம் கற்று வாழ்ந்தோம்
கண்டதென்ன கவலைகளை சூடிக்கொண்டோம்
இந்த நாள் மறைந்து இனிய நாளை சூடி வா
புத்தாண்டே!

உலக மைய தொடக்கம் உறவுகளை
இணைப்போம்!
உணர்வுகளை தமிழால் உணரச் செய்வோம்
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாமல்
உலகு ஒலிக்க சமாதான குரலால் சமிக்ஞைகள்
செய்திடுவோம்

மலரும் புது ஆண்டில் மகிமைகள் பல பெற்று
சமாதான புத்தாண்டாய் சந்திப்போம் யாபேரும்
புத்தாண்டே வருக! புதுமைகள் பல காவி வருக!
புத்தாண்டே வருக! புதுமைகள் பல காவி வருக !

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்ச மறுப்புக் கடிதம்

**அ**ன்றொருநாள் அன்னை மண்ணை விட்டு
ஐரோப்பிய மண்ணிற்கு ஆகாய வீதியாக
அனைத்து உறவுகளையுமே ஓரம் கட்டி
அகதி வாழ்வே எமக்கு நியதியென
உறவுகளை அங்கே தொலைத்து
உறக்கமிழந்து வாடியிருக்கையில்
மனப்பாரத்தை கடிதவரிகளாக்கி
ஊர்முகவரியிட்டு ஊருக்கனுப்பி
உறவுகளின் பதிலை எதிர்பார்த்து
ஏக்கமுடன் தாக்கங்கள் மத்தளமடிக்க
தூக்கம் மறந்து துயிலும் காலையில்
கிறீங் . . . . . கிறீங் மணியோசை கேட்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதவைத்திறந்த போதிலே கடிதக்காரன்
கையெழுத்தை பதிவாக்கி கடிதத்தை
திணித்து விட்டு கணப்பொழுதில் மறைந்தான்
துன்ப சுமையை சுமந்து வந்த துயரக்கடிதம்
நீலவண்ண கடிதம் அது நீண்ட துயர்க்கடிதம்
"தஞ்சமறுப்பு" என தட்டச்சில் வந்த கடிதம்
கொஞ்சமாயிருந்த நிம்மதியையும் வஞ்சகமாய்
பறிக்க வந்த கடிதம்
ஆய்ந்து பார்க்கிறேன் இங்கும் அகதி நான்
தாய் நாட்டிலும் அகதி நான்

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடுங்கள் பார்க்கலாம்.....

அன்னை மொழியைப் படியுங்கள்
அதனை புலத்திலும் வளருங்கள்
சிந்தனை செய்யத் துணிந்திடுங்கள்
சிறப்பாய் வாழப் பழகுங்கள்
அன்பை நாளும் படித்திடுங்கள்
அனைவரும் சேர்ந்து மகிழ்ந்திடுங்கள்

புலத்தில் நாங்கள் சேர்ந்திடுவோம்
புதுமைகள் செய்யப் புறப்படுவோம்
களத்தில் மக்கள் வாழ்வுதனை
கருத்தில் நாமும் எடுத்திடுவோம்
ஒற்றுமை உடனே வாழ்ந்திடுவோம்
ஓரினமாகச் செயற்படுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் நினைவும் தாயக நினைவும்

**தா**யின் நினைவும் தாயக நினைவும்
தீராத வேதனையாய் சிந்தையை நிறைக்குதே
போராலே விளைந்த பேராபத்தால்
பேயாக அலைந்தோம் நாடாக எங்கும்

அகதியாய் வந்தாலும் அதிலில்லை இன்பம்
அமைதியாய் வாழவே ஏங்குது இதயம்
புதுமைகள் இங்கு புதிதாக தோன்றினும்
பூரிப்பு மனங்களில் புதிதாக இல்லையே

தாயின் நினைவும் தாயக நினைவும்
தாராளமாய் நிறைக்குது மனதை இப்போ
போருடன் வாழ்ந்தாலும் வேரோடு வாழ்ந்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுபோட்டுப் பிரித்தாலும் குஞ்சுகளாய்
வாழ்ந்தோம்
வீறு கொண்டு எழுந்தோம் விரைவாகச்
செயற்பட்டோம்
நாடு விட்டு சென்றாலும் நம் தமிழை வளர்த்தோம்
புலம்பெயர்ந்து வந்தாலும் நிலமதையும்
நினைத்தோம்

தாயக நினைவை சேயாக எண்ணினோம்
Visa வும் வீடும் எல்லைகளாய்ப் பிரித்தன
வீணான பழிக்கு ஆளாகிப் போனோம்

வீட்டையும் இராணுவம் பூட்டியாச்சு
ஓட்டையும் உடைத்து ஓரமாய்ப் போட்டாச்சு
தேட்டத்தை தெருவிலே வீசியாச்சு
தோட்டத்தை ராணுவம் Camp பாக்கியாச்சு
இத்தனையும் எம்மண்ணில் நடக்குது இப்போ
அத்தனையும் நினைக்க அழுகையாய் இப்போ

# வெற்றித் தமிழ்

இதயத்துள் இனிக்கின்றது எங்கள் தமிழ்
இதமாக சுகம் தருவது எங்கள் தமிழ்
கன்னித் தமிழாக காலமெல்லாம் வெற்றித்தமிழ்
களிப்போடு பருகுவோம் விருப்போடு நாங்கள்
இனிப்பது எங்கள் தமிழ்

இன்பம் தருவது எங்கள் தமிழ்
உணர்விலும் எங்கள் தமிழ்
ஊற்றிலும் எங்கள் தமிழ்
முயற்சிக்குள் முளைவிடும் சிறகு தமிழ்
மூச்சுக்குள் நுழைவிடும் காற்று தமிழ்
வா . . . . . தமிழா! வா . . . . .
நல்ல தமிழில் நாமெல்லாம் பேசுவோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி கோடியாய் கொலை வெறியர்
குத்தினாலும்
ஓடி ஓடி எம்மினம் நாடு நாடாய்
வளர்க்கிறது நம்தமிழை

வெட்டி எறிந்து வேட்டையாடிய உடல்களின்
ஊனங்கள் இன்னமும் மாறவில்லை
காயப்பட்ட உடல்களாய் இன்னமும் கொடுமை
அகதியாய் தமிழன் அலைகின்றானென
பெருமை கொள்ளாதே !
புலம்பெயர் நாட்டிலும் தன்மானத்துடன்
புறப்பட்டோம்!
இளமை உணர்வுகளை தமிழுடன் இணைக்கப்
புறப்பட்டோம்

கன்னித்தமிழாக கணினியில் வருகுது
கனமான சொற்களாய் கணக்கின்றி இப்போ!
பொங்கு தமிழாக புலத்தில் எங்கும்
பொங்கியே எழுகுது செந்தமிழாக அங்கு
சிறுவர் நாவில் செந்தமிழ் இப்போ!
சிறப்பாய் வளருது நாளும் தனிலே
புலம்பெயர் வாழ்வில் புற்றீசல் படைப்புகள்!
பூக்கட்டும் வெற்றித்தமிழாக எங்கும்
புலத்தின் அவலம் காவியே கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களத்தில் வீரர் காவிய வரலாறாய் இப்போ!
வெற்றித் தமிழ் சுற்றியே எங்கும் வளருது
பற்றியே அதனை வளர்ப்போம் நாளை!

வானொலி பத்திரிகை வளமான ஊடகமாய்
வாஞ்சையுடன் தமிழை காவியே வருகுது!
எங்கும் தமிழ் எதிலும் தமிழாக
வட்டமிடுகுது வரலாற்றை நோக்கியே!

வன்னியில் வருகுது வைரவரிகள்
கன்னியாய் தமிழ் இன்னமும் உணர்வுடன்
"ஹைக்கூவிலும்" இப்போ கன்னித்தமிழ்
"பொய்கூட" அல்ல மெய்க்கூடவாய் இப்போ!
வெற்றித்தமிழாக எங்கும் சுடர்விடட்டும்
வென்றிடுவோம் தமிழீழம் நாளையே!

உலகத்தமிழினம் விழித்து விட்டன
உண்மைத்தமிழன் நிலையை எண்ணியே!
உலக அரங்கில் தமிழ் இப்போ!
உலாவுது வெற்றித்தமிழாக எங்கும்
CNN - BBC ஊடகங்களும் சிறப்பாக
காவி வரட்டும் வெற்றித் தமிழை
புலம்பெயர் வாழ்வில் அகதி இல்லை
புதியன படைத்து கல்வெட்டில் எழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுது எழுது தமிழால் எழுது
இளையவர் இணைந்து புதியவை எழுது

ஒற்றுமை ஒன்றையே ஆயுதமாக்கி
ஓரணியில் நின்று எப்போதும் செயற்படு
உலக அரங்கிலே தமிழை உயர்த்து
உண்மைத் தமிழனென ஊரறிய வாழ்!

இளைய தலைமுறையே எழுந்திடு!
இன்னும் ஏன் தயக்கம்?
புதிய தலைமுறையாய் வெற்றித்தமிழை
வளர்த்திடு!
உயர்த்திடு! உயர்த்திடு! தமிழை!
உலகில் இனிய மொழியென உயர்த்திடு!
வாழ்க தமிழ்!
வளர்க வெற்றித்தமிழ்!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லை நகர் நாவலரே!

**ந**ல்லைநகர் நாவலரே! நல்ல தமிழ் பாவலரே!
அல்லல் தீர்க்க வந்த அற்புத புலவரே!
சொல்லு தமிழுக்கு சுருதி சேர்த்த வல்லாளரே!
வெல்லும் எம் தமிழை வென்றெடுத்த பாவலரே!

ஆங்கில அடக்குமுறையிலும் அன்னைத்தமிழை
அழியாது காத்த பேராளரே! . . . . .
ஆண்டாண்டு தமிழ் வளர அருமை நூல்கள் தந்தீரே!
அச்சியந்திரத்தால் அச்சு வாகனமேறியது எங்கள்
தமிழ்
அன்னியரும் அதிசயிக்க வளர்ந்தது எங்கள் தமிழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைபிளையும் தமிழுக்கு மொழிபெயர்ந்த
வல்லாளர் நீர்
பள்ளியையும் பல இடத்தில் நிறுவிய புலவன் நீ
கல்வியையும் கற்று கன்னித்தமிழ் வளரவே . . . . .
காலமெல்லாம் உழைத்த உத்தமன் நீ

நாவன்மையாலே நல்ல தமிழ் வளர்த்தீர்
பாவன்மையாலே பைந்தமிழைப் பாடினீர்

நல்லை நகர் நாவலர் பிறந்திலேர்!
சொல்லு தமிழ் எங்கே? சுருதி எங்கே?
நாவலரே! பாவலரே! நாவினிக்க சுவைதந்த
நம்புலவரே! வாழி! வாழி!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை அலையாக . . . .

அலை அலையாக மக்கள் கூட்டம்
மாவீரர் கல்லறையை தம் கண்ணீரால்
நனைத்தார்கள்.

அலை அலையாய் அலைந்து
அடுத்தவர் பணத்தை எடுத்து
ஆண்டவனின் உண்டியலில் இட்டால்
ஆனந்தம் உனக்கு என எண்ணி
பேரானந்தம் கொண்டு திரிந்தால்
பெரும்பேறு நீ பெற்றிடுவாயா?
நியாயத்தின் தீர்ப்பு ஆண்டவனின்
பக்கத்தில் இருந்தால் . . . . . நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் ஆடினாலும் அநியாயம்
அழிவின் பக்கம் தான் !

நீதி நூல்களை கற்று நீதியுடன்
வாழ முயலுங்கள்.

■ ■ ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் இன்னும் வேண்டும் இறைவா!

இன்னும் இன்னும் வேண்டும் இறைவா
இதமான வாழ்வு தமிழுக்கு வேண்டும்
உரமான தமிழுக்கு வரமாக நீயும்
கரமாக வந்திடுவாய் பலமாக எமக்கு

வளமான வாழ்வில் தமிழுடன் இணைவோம்
வரம்புகள் இதற்கு வேண்டாம் இறைவா
திறமான சந்ததிகள் திகழட்டும் எங்கும்
தித்திக்கும் எங்கள் தமிழ் திசைகளெங்கும்
முப்புரம் எரித்த முக்கண் இறைவா!
முதலாக முடிபாக தொழுகின்றோம் உன்னை
முடிபாக சமாதானம் தழுவட்டும் எம்மை
விடிவாக வழங்குவாய் எம்முடன் நின்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் இன்னும் வேண்டும் இறைவா
இதமான வாழ்வு தமிழுக்கு வேண்டும்
இனியாக கனியாக தனியாக நீயும்
இணைவாய் எம்முடன் என்றும் நின்று

இன்னும் இன்னும் வேண்டும் இறைவா
இதமான வாழ்வு தமிழுக்கு வேண்டும்.

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்கென்றும் நாலு பேர்

**ந**மக்கென்றும் நாலுபேர்
நம் தமிழை வளர்த்தனரே!
கம்பன் வள்ளுவன்
பாரதி இளங்கோ
பாரினிலே நம் மொழியை
பரவிடச் செய்தனரே!

வேரான தாய்மொழியை
விழுதுகளும் பருகுவதற்கு
கூரான கவிதை ஆயுதத்தால்
சீராகக் காட்டினரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நியர் அழித்தாலும்
அழியாது எம் மொழி
புண்ணிய பூமியிலும்
புத்தளிராய் பூத்திடும் நம்மொழி
என்றிட்டு போற்றினரே!

பாட்டுக்கு பாரதியாய்
இராமாயணத்திற்கு கம்பனாய்
திருக்குறளுக்கு வள்ளுவனாய்
தீந்தமிழுக்கு இளங்கோவாய்
தித்திக்கும் எங்கள் தமிழ்
தீன் சுவையாகியதே!

இன்பங்கள் ஆயிரமாய்
இனித்தது எம்மொழி
இதனையும் நமக்கென்று
நாலுபேர் நற்சுவையாய்
தந்தனரே இன்பமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லான் வழிவேலனே!

உல்லாச உலகிலே சல்லாபமாய் சுற்றிடும்
மனிதர்களை ஒரு கணம் நின்று பார்!
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசியே
உறவுகளை உடைத்திடும் உணர்ச்சிகளைப் பார்!

நல்லவர் யார் என்ற நாட்டிலே தெரியாமல்
வல்லவர் போல் வரலாறுகள் பேசியே! உரைப்பர்!
நன்மைகள் செய்யத் துடிப்போரை நசிக்கிடச்
செய்து
தீமையைத் தீண்டித் தீண்டி வம்பிலே மாட்டியும்
விடுவர்
பொல்லாத துட்டராய் இவர்கள் மட்டும் ஏன்
இப்படி?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதை என்றும் உரசிப் பார்க்காமல்
உண்மைகள் யாதென உண்மையில் புரியாமல்
வெல்லிடத் துடிக்கும் வெண்மனங்களே!
ஒரு கணம் நில்லுங்கள்

நீதியா நீங்கள் செய்வது?
வல்லவன் அந்த வடிவேல் முருகனே!
சொல்வதை நீயும் கேட்டு சொக்கியே நில்லாமல்
காக்க காக்க வீண்வாதத்தை காக்க
நோக்க நோக்க மற்றவர் மனங்களை
நோகடிக்காமல் வாழப்பார்க்க!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர ஒளி தரும் சூரியனே!

அதிகாலை சூரியனே! அற்புத ஒளிப்பிளம்பே!
உதயத்துக் காலையில் ஒளிர்கின்ற ஒளியாலே
உள்ளத்துள் ஒருவித உற்சாகம் ஊட்டுதே!
குளிர்கின்ற காலையில் குதூகலமாய் உன்வரவு
குளிர்மையாய் உள்ளத்தைக் குளிர்விக்குதே!

உயிரினத்தின் பிறப்பும் தாவரத்தின் செழிப்பும்
உன்னால் அல்லவா?
நீ ஒரு கணம் நின்றிட்டால் . . . . .
இவ் உலகமே இருளில் மூழ்கிடுமே!
உள்ளத்தில் உன் வரவால் பற்றிய ஆசையில்
எண்ணிய எண்ணமே! பிரகாசமாய் வளர்ந்திடுமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டை நீயும் விரிக்கின்ற கதிராலே
ஒளியூட்டி ஒளிமயமாய் காட்டுகிறாயே!

பூமிப்பந்தின் புளகாங்கிதம் உன்வரவால்
புன்னகை எங்கும் புள்ளினங்கள் கூட
ஆற்று நீரும் பொங்கி எழும்
ஆனந்த தாமரையும் அகல இதழ் விரிக்கும்

காற்றும் கூட கவி பாடும்
ஊற்றும் கூட உன் வரவால் பெருகும்
நாற்றும் தளிர் விட்டு நாலா திசையும் வளரும்
நானிலத்தில் உன் வரவால் நன்மையே என்றும்

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலெழுத்தாய் முத்திரை பதித்தவர்

முதலெழுத்தாய் முத்திரை பதித்தவர்
முகவரியிலும் முதலிடம் பெற்றவர்
முதல்வனாய் எங்கள் குலவிளக்கு இவர்
முத்தாக எங்களுக்கு என்றும் அப்பா தான்

அப்பா எப்போதும் அன்பை சொரிபவர்
அறிவுக்கு எப்போதும் சிகரமானவர்
கண்டிப்பு அவரின் கண்களிலே தெரியும்
கலங்கரை விளக்கமாக காப்பவரும் அவரே!
பெற்றதனால் அம்மா பெருமை பல பெற்றாலும்
பெற்ற பின்பும் அப்பாவின் பெயரே துலக்கமாய்
இப்போ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலெழுத்தாய் முத்திரை பதித்தவர்
முனைப்புடன் எம்மையும் காப்பவர் இவரே!

முத்தாப்பாய் எமக்கு முதல்வனாய் அப்பா
வித்தாக விளங்கிய சொத்தான அப்பா
கொத்தாக தந்த அறிவுரை யாவும்
கொடுக்குது எமக்கு நல்லறிவுகளையே என்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனதை மயக்கிய
# மாலைக்காட்சி

சந்தன வெயிலின் சந்தோசமது
சாந்தமாய் மனதை நிறைத்தது
மெல்லிய குருவிகளின் பூபாளராகம்
மேனியை சிலிர்க்கச் செய்ததே!

வர்ணஜால வானத்து வேடிக்கை
வாஞ்சையுடன் சுண்டியிழுத்து
எண்ணங்கள் பலவற்றை எண்ணிட வைத்ததே!

நீலம் வெள்ளை சிவப்பு
நீண்ட வானத்தின் கோல அழகு
எத்தனை கோடி இன்பத்தை
எண்ணிடச் செய்ததே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிவானப் பரிதிக்கோளம்
அளப்பரிய ஒளிக்கீற்றை
அள்ளி அள்ளி தந்ததே!

பச்சை மரங்களின் பக்கவசைவு
தென்றல் காற்றின் வேகம் சொன்னது
வீடு தேடிச் செல்லும் விவசாயியும் கூடுசெல்லும்
குருவிக் கூட்டங்களும்
கும்மாளமடிக்கும் குழந்தைகளையும்
கண்டு என் மனம் எங்கோ சென்றதுவே!

விர்ரெனப் பறக்கும் சிற்றுந்தின் வேகமும்
விரைந்து நகரும் புகைவண்டியின் கதியும்
முண்டியடித்து இறங்கும் காட்சியும்
முனைப்புடன் ஏன்? இந்த அவசரம்
என என்மனம் கேட்டதுவே
இரவு வருகையை அனைவரும் எதிர்பார்க்க
இங்கித மயக்கும் மாலையாய்
அதுவும் விடை பெற்றதே!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றிந்த காற்றலைகள் இல்லையென்றால்

இனித்திடும் இன்பத்தமிழ் வளர்ந்திருக்குமா?
ஈழமண்ணின் இனிமை புரிந்திருக்குமா?
தமிழ்க் காற்று ஒலித்திருக்குமா?
தங்கத் தமிழ் வானுயர வளர்ந்திருக்குமா?

காற்றலைகள் வந்ததனால் தனிமை தகர்ந்தது
காதோரம் செய்திகள் கனிந்தன
தேன்சொட்டும் இலக்கிய நயமும் தேவாரப்
பாடலும்
தேனாக மனதை இதமாக்கின
அறிவியல் துளிகள் அடுத்தடுத்து வினாக்கள்
எடுத்தெடுத்து சொல்லும் காற்றலைகளை
எப்போதும் மறக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றிந்த காற்றலைகள் இதமான
உறவுகளாய் இணைந்திட்டனவே!
அந்நியமாய் அகதி வாழ்வில் புதைந்த எம்மை
சுண்டியிழுத்து சுமைகளைக் குறைத்ததும்
காற்றலைகளே!
சுந்தரத் தமிழோடு சுதந்திரமாக
துள்ளி விளையாட எண்ணவலைகளைத் தந்த
காற்றலைகளை இனியும் மறக்க முடியுமா?

ஒன்று இல்லாவிட்டால் ஒன்றின் நன்மையை
உணர முடியுமா?
காற்றில்லையென்றால் மூச்சில்லை பேச்சில்லை
கனிவான வாழ்வில்லை
உயிரின உற்பத்தியில்லை உயிரின
உதிர்ப்புமில்லை
உயிரினப் பெருக்கமில்லை
இன்றிந்த காற்றலைகள் இல்லாவிட்டால்
நின்றிடும் உலகம் நிஜமாக என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பாடும் தேனாட்டில் எழுந்த பெண் புயல்

மட்டுநகர் தந்திட்ட பெண்ணே! மாவீரத்தாயே!
விட்டு எம் உள்ளத்தில் நீங்காத வீரத் திலகமே!
நாட்டு விடுதலையை நாட்டமாய் கொண்ட
புயலே!
கேட்டும் கிடைக்காத தீர்வை கேட்டுவிடத்
துடித்தாயே!

பார்த்தும் பரிவுதராத இந்திய இராணுவத்துடன்
பார் எங்கும் பார்க்க பட்டினி சாவு புரிந்தாயே!
பட்டினி சாவு விட்டினித் தான் போகுமா?
பழந்தமிழர் வாழ்வு பரிகாசமாய் தான் போகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் பாடும் தேனாட்டில் மீளாத்துயில் கொள்ளும்
புயலே!
வான் ஓங்க வளருது உன் கனவு இன்று
தேனான உன் தியாகம் தெள்ளு தமிழுக்கு
கிடைக்கும்
வான் ஓங்க வளரும் உன் தமிழீழ கனவு

மீன் பாடும் தேனாட்டில் எழுந்த பெண் புயலே!
வான் உயர வளரும் உன் வரலாற்றுத் தியாகம்

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகத்தைக் காத்திடுவோம்

**தா**யகத்தை காத்திடுவோம்
தமிழர் புகழ் நாட்டிடுவோம்
மேலைநாட்டில் வாழ்ந்தாலும்
மேன்மைகளைப் பெற்றிடுவோம்

பண்புதனை காத்திடுவோம்
பட்டங்களைப் பெற்றிடுவோம்
அன்புதனை காத்திடுவோம்
அறவழியில் நடந்திடுவோம்

ஆண்டவனை வணங்கிடுவோம்
அமைதிதனை வேண்டிடுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களை நீக்கிடுவோம்
இன்பங்களை சேர்த்திடுவோம்

தமிழ்மொழியைப் பேசிடுவோம்
தாய்நாட்டை மதித்திடுவோம்
ஒற்றுமையை வளர்த்திடுவோம்
ஓரணியில் நின்றிடுவோம்

ஒன்றுபட்டு வாழ்ந்திடுவோம்
ஒரு குரலால் ஒலித்திடுவோம்
வேங்கைகளை ஆதரிப்போம்
வெற்றிகளைப் பெற்றிடுவோம்

தாயகத்தை காத்திடுவோம்
தமிழீழம் வென்றிடுவோம்
தாயகத்தை காத்திடுவோம்
தமிழீழம் வென்றிடுவோம்

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி இன்றிருந்தால்.....

எட்டயபுரத்தில் உதித்த எங்கள் பாரதியே!
எங்கும் தமிழ் முழக்கம் செய்த பாரதியே!
பாப்பாபாட்டு பாடி பைந்தமிழ் வளர்த்த பாரதியே!
பாரினிலே இன்று நடப்பதை பார்த்திடு பாரதியே!

பாரதியே நீ இன்றிருந்தால் . . . . .

அகில உலகும் இன்று தமிழ் மணப்பதை
கண்டிருப்பாய்
ஆனந்தமாய் சிறுவர்களும் பேசி மகிழ்வதை
பார்த்திருப்பாய்
அகதி வாழ்வின் அநியாயம் பல நடப்பதைக்
கேட்டிருப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துலகிலும் நடக்கும் அவலங்கள்
அறிந்திருப்பாய்

பாரதியே நீ இன்றிருந்தால்......

பாரதத்தைப் பாடியிருப்பாய்
பாரதம் இன்று பைந்தமிழ் இழந்து ஆங்கிலம்
பேசுவதையும்
கோலங்களும் கோடுகளும் கோமாளியாய்
இருப்பதையும்
கோரக் கொடுஞ்செயல்கள் நடப்பதையும்
பார்த்திருப்பாய்

பாரதியே நீ இன்றிருந்தால் . . . . .

வீட்டுக்கு வீடு தமிழ் பேசுவதைப் பார்த்திருப்பாய்
வீரமான தமிழர்களால் விளையும் நற்செயல்கள்
கண்டிருப்பாய்
வானலைகளிலும் உன் நாமம் ஒலிப்பதைக்
கேட்டிருப்பாய்
வண்ணமான உன்கவியும் வானலையில்
வருவதையும் கேட்டிருப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் பாரதியே நீ இன்றில்லை பழந் தமிழ்
பேசி மகிழ்வதற்கு
பாரதியே நீ இன்றில்லை பழந்தமிழ் பேசி
மகிழ்வதற்கு...

▣ ▣ ▣

# இளைய தலைமுறையே எழுந்திரு!

இளைய தலைமுறையே எழுந்து வா!
புதிய சமுதாயம் படைக்க வா
புதிய தலைமுறையாய் புறப்படு
புதுமைகள் பல செய்ய முற்படு

தடைகளை படைகளை உடைத்திடு
தக்கவோர் தளத்திலே உன் வாழ்வைப் பதி
அகதி என்ற வாழ்வு உனக்கில்லை
அந்த அநியாய வாழ்வில் உன்னைச் சிதையாதே!
உயர் கல்வி படித்து முன்னேறு
உயர்ந்ததோர் வாழ்வை நிலத்திற்கு காட்டு
கணினியிலே உன் தமிழை காவியமாக்கிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணினியென மனதிலே ஒரு மாண்புறு
கணினியை உருவாக்கிக் காட்டிடு.

புதிய தலைமுறையாய் எழுந்து வா!
புதுமைகள் பல படைக்க நிமிர்ந்து வா
அகிலத்தின் மொழிகள் அனைத்தையும் கற்றிடு
அன்னை மண்ணிற்கு அதனால் பெருமையும்
சேர்த்திடு

இளைய தலைமுறையே இன்னும் ஏன் தயக்கம்
எதிரி எம் மண்ணில் எத்தனையாயிரம் உயிர்ப்பலி
எடுத்தான்
அத்தனை போரிலும் மடிந்தது எம் இனமே!
வெந்துபோன எம்மவர் வேதனை தீர்த்து
சொந்த மண்ணில் எமக்கோர் நாடமைக்க
இளைய சமுதாயமே! எழுந்து வா!

இனியும் என்ன தயக்கம்
கோடி கோடியாக கொலை வெறியர் குத்தினாலும்
ஓடி ஓடி எம்மினம் நாடுநாடாய் வளர்க்கிறது நம்
தமிழை
வெட்டி எறிந்து வேட்டையாடிய உடல்களின்
ஊனங்கள் இன்னமும் ஆறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயப்பட்ட உடல்களாய் இன்னமும் நாங்கள்
ஏன் இந்த அவலம்? ஏன் இந்த கொடுமை!

அகதியாய் தமிழன் அலைகின்றான் எனப்
பெருமை கொள்ளாதே!
புலம்பெயர் நாட்டிலும் தன்மானத்துடன்
புறப்பட்டோம்
இளமை உணர்வுகளைத் தமிழுடன் இணைக்கப்
புறப்பட்டோம்
தமிழன் என்று சொல்லி தலை நிமிர்ந்து நிற்பாய்

ஆக்கப் பிறந்த இனத்திற்கு தாக்கம் வரலாமா?
செந்தமிழையும் சைவத்தையும் சிறப்பாக்க
இன்று
எம் தமிழராய் நாம் எழுந்து விட்டோம் இங்கு

வானலைபோய் தமிழ் வலம் வருவதைப் பார்!
தேமதுரத் தமிழ் தேசமெங்கும் ஒலிப்பதைப் பார்!
தேமதுரத் தமிழ் தேசமெங்கும் ஒலிப்பதைப் பார்!
கணினிக்குள் தமிழ் காவியமாய் மிளிர்வதைப் பார்!
எத்தனையும் எவ்வாறு எழுந்ததென்று
சிந்தித்தாயா?
தமிழன் என்ன இனமாய் தலைநிமிர்ந்து நிற்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் எமக்கு வரலாறு காட்டுகிறது.
நேரம் எமக்கு சிந்தனையை தூண்டுகிறது

அகதி என்ன முகமூடியை நீக்கி, ஆர்வமுடன்
எழுந்திடுங்கள்
எம் தமிழைக் காக்க புறப்படுங்கள்.
முடியாத காரியம் எதுவுமில்லை
முனைப்புடன் எடுந்திடுங்கள்.

அன்னைத் தமிழை அழிவின்றிக் காப்போம்
அகிலத்தில் தமிழனின் வீரத்தை விதைப்போம்.
புலிக்கொடி ஏற்றி புறநானூறு படைப்போம்
புதிய தமிழனாய் மிடுக்குடன் எழுவோம்.

புலம்பெயர் வாழ்வில் அகதி இல்லை
புதியன படைத்து கல்வெட்டில் எழுது
எழுது எழுது தமிழால் எழுது
இளையவர் இணைந்து புதியவை எழுது

ஒற்றுமை ஒன்றே எப்போதும் கடைப்பிடி
ஓரணியில் நின்று எப்போதும் செயற்படு
உலக அரங்கிலே தமிழ்மொழியை உயர்த்து
உண்மைத் தமிழனென ஊரறிய வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையே எழுந்திரு
இன்னும் ஏன் தயக்கம்
புதிய தலைமுறையாய் புலம்பெயர் வாழ்வில்
முளைவிடு!

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழலுக்கு இறைத்த நீரல்ல
# விடுதலையின் ஒளிவீச்சு

**மா**வீர மணிகளின் மகத்தான தியாகத்தால்
மலர்ந்தது மண்ணிலே சமாதானம் இன்று
மண்ணின் விடிவிற்காக விண்ணை முட்டும்
போரோடு விடுதலை பெறத்துடித்தவர்கள்

சருகாக உருமாறி சத்திய வேள்வியில்
சரித்திரங்கள் படைத்த தியாகிகள்
சுடுகலன்களை சுதந்திர விடியலுக்காய் ஏந்தி
நடுநிசியிலும் விடுதலைக்காய் வித்திட்டவர்கள்
பல்லாயிரம் வீரர்களை பலியாக்கிதான்
ஈழபூமி இன்னும் சமாதானத்தை சுமக்கிறது
விடுதலையின் வித்தாக முகிழ்ந்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகதியிலே சுதந்திர விடியலுக்காய்
காயத்தைக் கூட காணிக்கையாக்கியவர்கள்
இலட்சிய வேட்கையையே இறுதிவரை
உறுதியாகக் கொண்டு களத்திலே
காவியமானவர்கள் எங்கள் மாவீரமணிகள்

விழலுக்கு இறைத்த நீரல்ல இவர்கள்
விடுதலையின் ஒளி வீச்சாய் ஒளிர்பவர்கள்
ஆண்ட பரம்பரையை ஆளவேண்டுமென துடித்து
ஆகுதியாக்கிய மாவீர மணிகளின் தியாகம்

விழலுக்கு இறைத்த நீரல்ல
விடுதலையின் ஒளி வீச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு யூலையே!

**க**றுப்பு யூலையே! கறைபடிந்த யூலையே!
வெறுப்பு யூலையாய் வந்து போனாயே!
வெலிக்கடை காலி பலிக்கடாக்களாய் மக்களை
வேரோடு சாய்த்தாயே!
வெட்டியும் கொத்தியும் வேரொடு பிடுங்கியும்
பத்தி எரியும் நெருப்பிலும்
செந்தமிழரை படுகொலை செய்தாயே!
வண்டுபோல வாழ்ந்த இனத்தை
குண்டு இட்டே குலைய வைத்தாயே!
அகதியாய் எமக்கு நிரந்தர வாழிடம் இதுவும்
என்றிட்டாயே!
ஆனாலும் தமிழன் தலை நிமிர்ந்தே வாழ்கிறான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள காடையரின் சின்னா பின்ன செய்கை
சிதைத்தது எங்கள் தமிழீழ தேசத்தை
எந்த யூலாய் எம்மை சிதைத்ததோ
அந்த யூலையே கரும்புலியாக
காவியம் படைக்க வைத்தது
கப்டன் மில்லரே கரும்புலியாகி
சிங்களப் படையை சிதைத்தான் அன்று
சீறி எழுந்த எங்கள் வீர மறவர்களால்
சிதைந்தது சிங்கள கூலிப்படைகள்
இரும்பு மனிதராய் இதயத்தை
கல்லாக்கி கரும்புலியாய் எழுந்ததும் யூலையே!
கறுப்பு யூலையே கறை படிந்த யூலையே
காயப்பட்ட உடல்களின் ஊனங்கள்
இன்னமும் மாறவில்லை . . . . .

இனியும் நீ கறுப்பு யூலையா?
கறுப்பு யூலையே கறை படிந்த யூலையே
விருப்பு யூலையாய் வந்து விடு!
விடியலைத்தான் தந்து விடு!

▣ ▣ ▣

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லறைகள் மீண்டும் கருத்தரிக்கின்றன

கல்லறைகளே! எங்கள் காவிய நாயகர்
இருப்பிடங்கள்
சொல்லுதமிழுக்கு உயிர் தந்த தியாகிகளின்
நினைவிடங்கள்

தமிழீழ கல்லறைகளே! தமிழ் பேசும்
சொல்லறைகள்
களத்திலே போராடி காவியமான வீரர்களின்
கனவறைகள்
உன்னத தியாகிகளின் நினைவறைகள் இவை
உயிர்த்தியாகங்களை உலகிற்கு காட்டும்
உன்னத இருப்பிடங்கள்! மாவீரர் கல்லறைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லறைகள் அல்ல கருத்தரிக்கும் கருப்பைகள்
வல்லறைகளாக வரலாற்று பொக்கிஷங்கள்
சூரிய கதிர்களாக சுடர்விடும் ஒளிபிம்பங்கள்
பாரிய விளைவுகளை தரும் பளிச்சிடும் ஒளி
விளக்குகள்
எங்கள் மாவீரர் கல்லறைகள் . . . . .

கல்லறைகள் மீண்டும் கருத்தரிக்கின்றன!
காவிய நாயகர் வரலாற்றை மீட்டுப் பார்க்க
சொல்லறைகளாய் சொல்லோவியம்
படைக்கின்றன
வில்லறைகளாய் வீர காவியம் எழுதுகின்றன
கல்லறைகளே! கதைபேசும் வீர வரலாற்றை
விதைக்கின்றீர்களே!

சருகாகி தேகத்தை விலையாக்கிய வீரர்களே!
உயிரிலும் மேலாக உயிர்த்தியாகம் புரிந்தீர்களே!
இன்று கல்லறையில் துயில்கிறீர்களே!
காவிய நாயகர்களே! கரும்புலி வீரர்களே!
கல்லறைகள் மீண்டும் கருத்தரிக்கின்றன
காவிய நாயகர் வரலாற்றை சொல்வதற்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை! விடுதலை! விடுதலை!

ஈழமக்கள் எங்களுக்கு இலங்கை நாட்டில்
விடுதலை
இடர்களற்ற இனிமை வாழ்வு மலர்வதற்கு
விடுதலை
கோரக் கொடுமை கொடுங்கோல் ஆட்சி
ஒழிவதற்கு விடுதலை
வீரமக்கள் தீரமாக வாழ்வதற்கு விடுதலை
(விடுதலை விடுதலை)
அகதியென்றும் அடிமையென்றும்
எவனுமில்லை ஈழத்தில்
உயர்வு என்றும் தாழ்வு என்றும் உலகில் மக்கள்
இல்லையே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி கலைகள் அனைத்தும் கற்று கனிவுடனே
வாழவே
மனிதர் யாவும் சேர்ந்து வாழ்தல் வாழி
வாழியவே.

(விடுதலை விடுதலை)

ஆண்களென்றும் பெண்களென்றும் பேதமின்றி
வாழுவோம்
மண்ணில் ஈழம் மலர நாங்கள் மக்களாக
வாழுவோம்
தர்க்கமின்றி பகைமையின்றி தாயகத்தில்
வாழுவோம்
அடிமை வாழ்வு அகற்றி நாங்கள் ஆனந்தமாய்
வாழுவோம்.

(விடுதலை விடுதலை)

▣ ▣ ▣



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலைத் தாயகத்தில் வெளியிடுவதில் பங்களிப்புச் செய்த நிறுவனங்களுக்கு நன்றி


**ORIENTALISCHE TEXTILIEN & SCHMUCK**

KOENIGSWALL FUSSGAENGER ANLAGE,
(AM HBF)
44137 DORTMUND

*Tel : 0231-162377* *Fax : 49-(0)231-147836*

*Restaurant*

**AMARA**

Italienische & Indische Spezialitäten

Langestr. 81 - 44137 Dortmund

*Tel : 150 87 90*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# S.K. SILKSPARADISE

ADLER STR 33

44137, DORTMUND

GERMANY

*Tel : 0049-0231-9501647-49    Fax : 0049-0231-9501648*

*E-mail : peethamparam@aol.com*

# T.T.S. BROTHERS

ASIEN SUPER MARKET

Jewellery, Textiles & Food Items

Retail & Wholesale

*Rheinische str-52*
*44137, Dortmund*
*Germany*
*Tel : 0231-819288*
*Fax : 0231-833431*
*Video-abt : 811073*

*Garten str-29*
*48147, Munster*
*Germany*
*Tel : 0251-2301184*
*Fax : 0251-2301183*
*Jewels : 0251-927755*

*Web : www.tts-brothers.de*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LINKAM ASIEN MARKT

JEWELLERY, TEXTILES & VIDEO

ADLERSTR.5

44137 DORTMUND

*Tel & Fax : 0231-143811, 0231-161158*

# AYNGARAN VIDEO

GERMANY

Rheinischestr.83

D-44137 Dortmund

*Tel : 0231-1859352* *Tel : 0231-1859480*

*Mobil : 0173-7851147*

*e-mail : palendra@ayngaran.de*

*Web : www.ayngaran.de*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LONDON TEX

Come in and find out!!!

WHOLESALE & RETAIL

In Textiles and Jewellery

*Rheinische str-64*
*44137, Dortmund*

*Telefon : (+49)0231-1891220*
*Fax : (+49)0231-3950692*
*E-mail : ssamanta10aol.com*



## GANESH TRADERS

*Konigswall 16*
*Underground am HBF*
*Dortmund*
*44137 Dortmund*

*Telefon : 0231-160494*
*Fax : 0231-1656524*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியர்
கலைஞானமணி
நகுலா சிவநாதன்

**மொத்தத்தில் எண்ணத்தில், எழுத்தில் சமூக உயர்வைப் பிரதிபலிக்கும் அரிய சமூக உளவியலாளர்**

பொ. கனகசபாபதி
பல்கலாசார ஆலோசகர்
கனடா.

**சரம் சரமாய் கொத்துக் கொத்தாய்**
**கவி காணும் அழகோ அழகு**
**இவர் தமிழ் வரிகளில்**
**வண்ணமாய் வண்ண வண்ணமாய்**
**காணலாம் கவிகளை**

ஏலையா முருகதாசன்
தலைவர், சர்வதேச புலம்பெயர்
தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்
யேர்மனி

**அச்சம் அகற்றி எதையும் அள்ளி**
**இறைக்கும் பாங்கு கேட்போர்**
**மனதைக் கிளறவைக்கும்**

விஜிதா மொஹமட்
நெதர்லாந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org